# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆனி 17உ (1—7—73) ஞாயிறு ஐ:அவ் 29 – புத்தகம் 26 இதழ் 29


## தேர்தல் இடாப்புகளில் தமிழர் பெயர்கள் கொலை!

சிங்களப் பகுதிகளிலுள்ள தேர்தல் வாக்காளர் இடாப்புக்களில் தமிழர்களின் பெயர்கள் கொலை செய்யப்பட்டுவருகின்றன.

அண்மையில் கொழும்பில் விநியோகிக்கப்பட்ட திருத்தப்பட்ட தேர்தல் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் 'கொலை' செய்யப்பட்டு இருந்ததாக பலர் புகார் செய்துள்ளனர்!

பரநிருபசிங்கம் என்பது பரனருபசிங்கம் என்றும் இளையதபபி என்பது எளிய தம்பி, எலிய தம்பி, என்றும், கெங்காதரம் தென்காதரம் என்றும் சங்கரதாஸ், சங்கதாஸ் என்றும் தங்கள்பெயர்கள் உருமாற்றி கொலை செய்யப்பட்டு இருந்ததாக பலர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தனர்.

இதனால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் திரு இளையதம்பி உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள அமைச்சுக்கு ஓர் ஆட்சேபக் கடிதம் அனுப்பியுள்ளார். அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

''தமிழில் எளியதம்பி என்ற சொல்லிற்குப் பொருள் தரக்குறைவான், கேவலமான, இழிவான, வரிசையில் சேர்க்க விரும்பாத, வரிசையில் சேர்க்கப்படாத ஒரு தாழ்ந்தவன் என்று கொள்ளப்படும்.

தமிழில் எலியதம்பி என்று அழைத்தால் திருடிப்பிழைக்கும் எலியைக் குறிப்பதாகும். எலி-உயிரினங்களில் மூன்றறிவுப் படைப்பில் ஒன்றாகும். ஆறறிவினத்தவனு

(7-ம் பக்கம் பார்க்க)

### தோட்டத் தொழிலாளர் குடியேற்றப் பிரச்சினையில்

# அரசின் குத்துக்கரணம்

## மலையகத் தமிழர்கள் பெரும் அதிருப்தி! அரசைவிட்டு வெளியேறக் கோரிக்கை!

கிழக்கு மாகாணத்தில் மலையகத்தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் குடியேற்றம் சம்பந்தமாக ஐ தொ. கா. தலைவர் ஜனாப் அஸீஸ் அடித்த திடீர் குத்துக் கரணத்தைக்கண்டு மலையகத் தமிழர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

மலையகத் தமிழர்களின் குடியேற்றத்தை தடுப்பதற்காக அவசரகாலச் சட்டத்தைப்பயன்படுத்தி சட்டவிரோதக் குடியேற்றத்தை தடுக்கும் விதிகளை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளதை வரவேற்றுக் கருத்துத்தெரிவித்துள்ள ஜனாப் அஸீஸின் திடீர் குத்துக்கரணப் போக்குத்தான் மலையகத்தமிழ் மக்களிடையே ஆத்திரத்தை மூட்டியுள்ளது!

இதே வேளையில் அரசாங்கக்கட்சியை விட்டு ஜனாப் அஸீஸ் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையும் அவரது கட்சிக்குள்ளேயே பூதாகாரமாக எழுந்துள்ளது.

மலைநாட்டுத்தமிழர்கள் கிழக்கு மாகாணத்தில் குடியேறி விவசாயத்திலீடுபடுவது தடுக்கப்படவேண்டும் என்று கூக்குரலெழுந்தபோது, தமிழர் கூட்டணி, இ.தொ.கா, மற்றும் பல மலையக மன்றங்கள் அக்கூக்குரலை எதிர்த்து குரலெழுப்பின. இந்த அதி முக்கிய பிரச்சினை மீது அரசாங்கக் கட்சியிலிருக்கும் ஜனாப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழா சிந்தியடா சிந்தி!

'தனி நாடு' கோருவதென்பது ஒரு தெளிவான வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசத்தையுடையதும், ஒரே மொழி பேசும் மக்கள் சேர்ந்துவாழும் போதும் இடம் பெறத்தக்க செயலாகும்—

—இவ்வாறு கூறியிருக்கிறார் ஈழத் தமிழரின் வரலாறு தெரியாமல் தத்தளிக்கும் வ. பொன்னம்பலம்! தமிழ் மக்கள் தமக்கென ஒரு சொந்த ஆட்சியமைப்பதற்கு அவர்களுக்கு தெளிவான வரையறுக்கப்பட்ட எல்லைப் பிரதேசம் கிடையாதாம் — தமிழ் மொழி பேசும் மக்கள் சேர்ந்து வாழவில்லையாம்! கூறுகிறார் வ. பொ.!

தமிழா! இதைக் கேட்டு நீ இடி இடியென்று சிரி! உனக்கென்று ஒரு அரசு வைத்து — ஒரு நாடு வைத்து ஒரு கொற்றம் வைத்து—தனியாட்சி நடத்தினாய் அன்று! வ. பொ. வின் வரலாற்று அறிவுக்கு அது கூட எட்டவில்லை இன்று!

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதை எழுத்து மூலமே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் சிங்கள மக்களின் இரு பெரும் தலைவர்களான காலஞ்சென்ற பண்டாரநாயகாவும், டட்லி சேனநாயகாவும்!

ஆனால்—இந்த இரு மாகாணங்களும் ஈழத் தமிழர் தாயகம — தெளிவான வரையறுக்கப்பட்ட எல்லைக் கோடுடைய தாயகம்—என்பது வ. பொ. வுக்கு மட்டும் ஏனோ புரியவில்லை!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தாம் பெரும்பான்மையாக சேர்ந்து வாழுகிறார்கள் என்ற உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மையும் சிங்களத் தேசிய மயக்கம் எனும் சதை அதிகமாக வளர்ந்துவிட்டதனால் போலும் வி. பி. யின் கண்ணுக்குப் புலப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களைவிட வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் தமிழர் சுதந்திரம் கோரக் கூடாதென்பதும் வ. பொ. வின் அசட்டு வாதம்!

'பாகிஸ்தான்' வேண்டுமென்று ஜின்னா கோரிய போது அவர் கோரிய பாகிஸ்தானுக்கு வெளியேதான் ஏராளமான முஸ்லிம்கள் இருந்தார்கள்! அதற்காக அவர் 'பாகிஸ்தான்' கோராமல் விட்டுவிடவில்லை!

உலக நாடுகளில் எல்லாம் யூதர்கள் சிதறி வாழ்ந்தார்கள் என்பதற்காக 'இஸ்ரேல்' என்ற யூத நாடு தனியாக உருவாகாமல் விடவில்லை.

நம் மத்தியில்தான் விடுதலைக் கோரிக்கைக்கு எதிராக விழல் நியாயங்கள் எல்லாம் எழுப்பப்படுகின்றன

இந்த வீணர்களை ஒதுக்கித்தள்ளி விட்டு நாம் ஏன் நம் விடுதலையை மீட்டிட முடியாது? தமிழா! சிந்தியடா!! சிந்தி!

### மட்டக்களப்பு மாநகரசபை கலைப்பு:

## தமிழர் கூட்டணி அதிகாரத்தினை கைப்பற்றுவதை தடுக்கும்சூழ்ச்சியா?

### மட்டுநகர் தமிழ் மக்கள் கேள்வி!

மட்டக்களப்பு மாநகரசபை தனது புதிய மேயரை தெரிவு செய்யவிருந்த தருணத்தில் திடீரெனக் கலைக்கப்பட்டது ஏன்? புதிய மேயராக தமிழர்கூட்டணி ஆதரவாளர் ஒருவர் வரக்கூடிய வாய்ப்பை இல்லாமற் செய்யும் திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சியா இது? — இவ்வாறு கொதிப்புடன் கேட்கிறார்கள் மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்கள்.

மட்டக்களப்பின் மாநகர மேயராக கடமையாற்றிய திரு. தியாகராசா அண்மையில் தனது சொந்தக்காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகிக்கொண்டார். திரு. தியாகராசா அரசாங்கக்கட்சியை ஆதரிப்பவர் என்று சொல்லப்பட்டது.

திரு. தியாகராசாவின் பதவி துறப்பையடுத்து புதிய மேயருக்கான தெரிவு 29.6.73ல் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இத்தெரிவின்போது, தமிழர் கூட்டணி ஆதரவாளர் ஒருவர் மேயராகத் தெரிவு செய்யப்படுவதற்கு போதியவாய்ப்பு இருந்ததாக அம்மாநகர சபை வட்டாரங்களில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மட்டுநகர் மாநகர சபை உள்ளூராட்சி அமைச்சரினால் 25. 6. 73ல் திடீரெனக்கலைக்கப்பட்டு விட்டது. அமைச்சரின் இந்தத் திடீர் நடவடிக்கை மட்டக்களப்பு மக்களிடையே பெரும அதிருப்தியை தோற்றுவித்திருக்கிறது.

மட்டக்களப்பு மாநகர சபை நிர்வாகத்தை சிங்கள ஆணையாளர்ஒருவர்பொறுப்பேற்கும் போது, அதில் மட்டக்களப்பு இரண்டாவது பா. உ. பி. ஆர். செல்வநாயகமும் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டது.

'மாநகர சபை நிர்வாகத்தில் பாரதூரமான குற்றச்சாட்டுக்களோ அன்றி நிதிப்பற்றாக் குறைகளோ இல்லை. அப்படியிருக்கையில் மந்திரி மாநகர சபையைக் கலைத்திருப்பது புரியாத புதிராக இருக்கிறது. அரசியலில் இது வஞ்சம் தீர்க்கும் முகமாக நடந்திருக்குமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது' என்று தமிழர் கூட்டணியின் ஆதரவாளரும் மேயர் பதவிக்கு போட்டியிட விருந்தவருமான மாநகர சபை உறுப்பினர் திரு. அம்பலவாணர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. செ. இராசதுரை பா. உ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

'மட்டக்களப்பு மாநகர சபையை அமைச்சர் திடுதிப்பெனக் கலைத்திருப்பதானது ஜனநாயகத்துக்கு விழுந்த பலத்த அடியாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு ஓர் ஆபிரகாம் லிங்கன்!
# தமிழ் ஈழத்துக்கோர் அமிர்தலிங்கன்!

## செல்வாவின் சிந்தை கவர்ந்த வாரிசு!
## தியாகத் தீயில் உருவான தங்கம்

## அவரது தலைமையில் புதிய தமிழகம் பூத்திடப் போராடுவோம்!

இலங்கையின் சரித்திரத்திலேயே — இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் வரலாற்றிலேயே — இந்த நாடு என்றுமே கண்டிராத அளவில் தமிழ் மக்கள் சகல துறைகளிலும் பெரும்நெருக்கடிக்குள்ளாகி ரசியல் சமூக பொருளாதாரத் துறைகளில் மிக அடிமைத்தனமா முறையில் வாழுகின்ற இந்த இக்கட்டான சோதனையும், வேதனையும், சோகமும் நிறைந்த இவ்வேளையில் இலங்கைத் தமிழர்களின் சுதந்திர விடுதலை இயக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது தமிழ் மக்கள் செய்த தவப்பயன் என்றே கூறவேண்டும்.

### ஈழத்து 'லிங்கன்'

இருண்ட அமெரிக்காவின் விடிவெள்ளி ஆபிரகாம்லிங்கன், அடிமைப்பட்ட நீக்கிரோ மக்களின் தன்நிகரில்லாத் தலைவன் மாட்டீன் லூதர்கிங், பாரத நாட்டின் எழுச்சி மிகு சுதந்திர விடுதலைப் படைத் தலைவன் சுபாஸ் சந்திரபோஸ், வங்காளச் சிங்கம் முஜிபுர் ரகுமான், உலக மா வீரன் கெனடி ஆகிய தன் நிகரில்லாத் தியாக வீரர்கள் போன்று தலைவர் அமிர்தலிங்கமும் நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் வாக்கு வன்மையும் வீரமும் துணிவும் ஒருங்கே அமையப்பெற்றவர் இதற்குக் காரணம் தமிழரசுத் தந்தை அவர்களின் அரவணைப்பே;

### வீரத் தலைவன்

1949ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் ஆரம்ப தளகர்த்தர்களில் ஒருவரும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் தனிப்பட்ட—பொதுப்பட்ட சகல பிரச்சினைகளையும் அணுவணுவாக நன்கு அறிந்தவரும் தமிழ் இளைஞர்களின் அன்பு அண்ணனும் தந்தையர்களின் பெரு மதிப்புக்குரிய மைந்தனும் தமிழ்த் தாய்மார்களின் வீரப்புதல்வனும் தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரும் செல்வாக்கும் மதிப்பும் பெற்றவரும்—ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற இலட்சியக் கொடி பிடித்து இன மத வேறுபாடின்றி, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமையின்றி ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி படித்தவன் படிக்காதவன் என்ற பாகுபாடின்றி இரும்பு மனிதன் அமரர் நாகநாதன் போன்று சேவை செய்பவரும் இந்து கத்தோலிக்க இஸ்லாமிய மதத் தலைவர்களாலும் மக்களாலும் நன்கு அறிந்து மதிக்கப்பட்டவருமான தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தன்னையும் தன் குடும்பத்தையும் தமிழ் மக்களின் விடுதலைக்கு அர்ப்பணித்து செயல்படுவதைக் கண்டு தமிழ் இனம் தன் வீரத் தலைவனாக அவரை வரவேற்கின்றது.

### தியாகச்செம்மல்

இறைமையும் தன் ஆதிக்கமும் கொண்ட ஓர் சுதந்திர சமதர்மத் தமிழ் நாட்டை —தமிழ் அரசை — காண்பதற்காக கடந்த இருபத்திமூன்று ஆண்டுகளாக இரவு பகல் என்று பாராது தமிழ் மக்கள் வாழும் சகலதிக்கும் சென்று — தன் விருப்பு வெறுப்புக்கள் அனைத்தையும் மறந்து — தானும் தன் அன்பு மனைவி மங்கையர்கரசி அவர்களும் சிங்கள வெறி கொண்ட அரசாங்கங்களின் மிருகத்தனமான வன்செயல்களுக்குள்ளாக்கப்பட்டு — பல தடவைகள் சிறை சென்றும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டும் பொலிசாராலும் இராணுவத்தினராலும் அடிபட்டு உதைபட்டு சாக்கடைக்குள் தூக்கி வீசி எறியப்பட்டும் பல்வேறு நிந்தைகள் செய்யப்பட்டும் அனைத்தையும் மறந்து தன் இரண்டு கண்ணின் மணிகளான அன்புச் செல்வங்களான காண்டீபன் பகீரதன் ஆகியோர்களின் எதிர்கால வளர்ச்சியை சிறிதும் சிந்தியாது தமிழ் இனத்துக்கே தன்னை முற்று

**ஆசீர்வாதம்**
**ஹென்றி ஜே. பி.**

முழுதாக அர்ப்பணித்த தியாகச் செம்மல் நம் தானைத் தலைவர் அமிர்தலிங்கமே!

### 53 ஹர்த்தாலில் அமிரின் பங்கு

இருபத்தைந்து சதத்துக்கு கிடைத்த கூப்பன் அரிசி எழுபது சதமாக 1953ம் ஆண்டு திரு. டட்லிசேனநாயக்கா அரசாங்கத்தால் விலை உயர்த்தப்பட்டபோது அதை மிகவும் தீவிரமாக எதிர்த்து ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் அரக்கர் ஆட்சி ஒழிக என்று கூறி கர்த்தால் நடாத்தி வெற்றி கண்ட லங்கா சமசமாசக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமது கூற்றை நிலை நாட்ட முடியாது தமிழரசுக் கட்சியின் தயவை நாடியதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண கர்த்தால் கொண்டாடி ஏனைய மாகாணங்களுக்கு முன்மாதிரி காட்டி வெற்றி கண்டதும் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் தீவிர பிரசாரமும் துடிதுடிப்புமே காரணமாகும்.

### இரத்தம் கொட்டிய நிலையில் வீர முழக்கம்

1956ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்கா அவர்களால் தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது தமிழரசுக் கட்சி காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்ததும் தலைவர்கள் வன்னியசிங்கம், இராசவரோதயம், அமிர்தலிங்கம் ஆகியோர்களும் தொண்டர்களும் மிருகத்தனமான முறையில் சிங்களக் காடையர்களால் இரத்தம் ஓட ஓடத் தாக்கப்பட்டதையும் மண்டை பிளந்து செங்குருதி கொட்டக் கொட்ட பாராளுமன்றக் கூடடத்தில் கலந்து பண்டாரநாயக்காவின் தனிச் சிங்கள ஆட்சியை கண்டித்து மிகத் துணிவுடன் பேசிய தளபதி அமிரை தமிழினம் மறக்க முடியுமா?

1957ம் ஆண்டு அம்பாறையில் நடைபெற்ற இனக் கலவரத்தில் துணிவுடன் அம்பாறை சென்று தமிழர் நலன்களைக் காப்பாற்றியதையும் 1958ம் வருடம் வவுனியாவில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மாநில மாநாட்டையடுத்து ஏற்பட்ட தமிழ் சிங்கள இனக்கலவரத்தில் சிங்களக் காடையர்களால் தமிழர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதையும்.

தமிழ் பெண்களும் கன்னியர்களும் பகிரங்கமான முறையில் மிருகத்தனமான முறையில் கற்பழிக்கப்பட்டதையும் தமிழ் வாலிபர் சித்திரவதை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டதையும் தமிழர் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதையும் சொத்துக்கள் அனைத்தும் கொள்ளை அடிக்கப்பட்டதையும் யாருமற்ற அனாதைகளாக அகதிகளாக பொது இடங்களில் உடையின்றி உணவின்றி குடிக்க தண்ணீரின்றி தமிழர்கள் தவிக்கிறார்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதையும் அறிந்து நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிதுடித்து கடும் சினம் கொண்டு தன்னையும் மறந்து தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் நெருக்கடிகள் அனைத்தையும் தெரிந்தும் அவற்றை ஒரு கணமும் பொருட்படுத்தாமல் துச்சமென மதித்து ஊரடங்குச் சட்டம் உழுத்துப்போன பண்டைக்காலச் சட்டம்—சுதந்திர வீர இளைஞர்கள் முன்னிலையில் அது செல்லுபடியாகாத கோழைகளின் சட்டம் என்று சொல்லி பொலிசுக்கும் இராணுவத்துக்கும் தெரியாமல் ஒருசில வீர இளைஞர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு கடல் மார்க்கமாக தனி ஒரு வள்ளத்தில் பிரயாணத்துக்குவேண்டிய உணவு உடை எதுவும் எடுத்துச்செல்லாமல் மட்டுநகர் சென்று துயர்பட்ட தமிழ் மக்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி அவர்களுக்குவேண்டிய சகல உதவிகளையும் செய்து அனைவரையும் தமிழ் பிரதேசத்துக்கு பாதுகாப்பாக அனுப்பிவைத்ததையும் தமிழ் மக்களும் உலகும் நன்கறியும்.

### இளைஞர் எழுச்சியின் சின்னம்

சோர்வுற்ற இளைஞர்களுக்கு அண்ணன் அமிர்தலிங்கம் என்றாலே அவர்களுக்கு அவர்களை அறியாமலே ஓர் கட்டுக்கடங்காத வீர உணர்ச்சி ஏற்படுவதையும் அதன்மூலம் அவர்கள் தம்மையும் தமது பெற்றோர் சகோதரர்கள் அனைத்தையும் மறந்து எதையும் செய்யத் தயாராகிவிடுவார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மலை நாட்டிலும் கொழும்பு பிரதேசத்திலும் கரை ஓரங்களிலும் வாழும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்தவரும் அவர்களின் வீடுகளுக்குசென்று அவர்களை நேரடியாக தெரிந்து வைத்திருப்பவரும் தமிழ் மக்கள் மத்தியில் பல நூற்றாண்டுக் காலமாக துர்நாற்றம் கொடுத்த தீண்டாமையை தமிழரசுக் கட்சியின்மூலம் மண்ணோடு மண்ணாக குழிதோண்டிப் புதைத்தவரும் சாதியைச் சொல்லி வயிறு வளர்த்த வேலையற்ற சோம்பேறி எத்தர் கூட்டத்தையும் இனத்தையும் மதத்தையும் விலை கூறிவிற்று பட்டம் பதவி பெற்ற எட்டப்பர் கூட்டத்தையும் நேருக்குநேர் நின்று துணிவுடன் அவர்களின் கீழ்த்தரமான இழி செயலை கண்டித்து தமிழ் தாயின் மானங் காத்துவருபவருமான அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் தன் தலைமைப் பதவிக்காலத்தில் தமிழ் இனம் தன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் சுமத்தியிருக்கும் பெரும் பொறுப்பையும் உணர்ந்து என்றுமில்லாத

(8-ம் பக்கம் பார்க்க)

## தலைவன்! இவன் தலைவன்!!

அமிர்தலிங்கன் தமிழ் ஈழத்தின்
ஆபிரகாம் லிங்கன்!
திமிர்வெறிச் சிங்களம் திணற உலாவும்
தீரன்! மா மறவன்!
அமிர்த மாமணித் தமிழ் அன்னைக்கோர்
ஆண்மைத்தமிழ் மைந்தன்!
நிமிர் நடை ஏறு! நெடும்படைத்தளபதி!
நிறைபுகழுடைத் தலைவன்!

அறப் போராடி மண்டைச் செந்நீர்
ஆறாய்ச் சிந்தியவன்!
வெறிக்கூத்தாடும் வெறியர் அரசின்
வெஞ்சிறை ஆடியவன்!
சிறப்போர் ஆயிரம் சேரும் தமிழன்
தேசம் தாங்கியவன்!
குறிக்கோள் அறமாய்க் கொண்டோர் படையின்
கொற்றப் பெருந்தலைவன்!

காற்றில் வல்லான்—கனலில் வல்லான்
கடற்பெருக்கில் வல்லான்!
ஆற்றல் மிக்கான்! அமிர்தலிங்கன்!
அருந்திறல் மிகவுடையான்!
போற்றலுக்கு பொருத்தமானவன்!
பொங்கு மலைத்தோளான்!
நூற்றில் ஒருவன்! கோடியில் ஒருவன்!
நுவலரும் தமிழ்த் தலைவன்!

கூனை நிகர்த்த செல்வா மழையாய்
வழங்க வருந் தலைவன்!
கடலை திமிர்த்து நேர்நடைத் தமிழர்
கொள்ள வருந்தலைவன்!
ஏனையோர் போல எம்மோர் அரியணை
ஏற வருந்தலைவன்!
தானைத் தமிழர் ஆசைத் தலைவன்!
தலைவன்! இவன் தலைவன்!

(சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் சிறைவாசம் அனுபவித்துத் திரும்பியபோது பாடியது.)

காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரட்டை

# 'பஞ்சராய்'ப்போன ஐந்து அம்சத் திட்டம்!

## கம்யூனிஸ்டுகளின் கடைசி முகாரி!!

அன்பு நண்பா,

தேசத்துரோகிகள்,
நாட்டுப்பற்றற்ரேர்,
பிற்போக்குவாதிகள்,
வங்குரோத்து பேர்வழிகள்,
கலவர வாதிகள்,
முதலாளித்துவத்தின் எடுபிடிகள்,
பகல் கனுக்காரர்கள்.

—இவ்வாறெல்லாம் தமிழர் கூட்டணியினரை நோக்கி கண்டனங்களும் ஏசல்களைகளும், இழி மொழிகளும் பழிச் சொற்களும் அரசாங்கக் கட்சிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சில 'தமிழர்'களால் மிகவும் வேகமாகக் கொட்டப்பட்டு வருவதனைக் கவனித்திருப்பாய்! அதுவும் ஆறு அம்சக்கோரிக்கையை விடுத்து ஓராண்டு காலம் பொறுத்திருந்து விட்டு அரசால் அலட்சியப் படுத்தப்பட்ட நிலையில் தமிழ் ஈழ சுயாட்சி பற்றி (அவர்கள் 'பாஷை'யில் தனிநாடு பற்றி) தமிழர் கூட்டணி கடந்த மே திங்கள் 17ம் நாள் எடுத்த தீர்மானத்தின் பின் இந்தச் 'சலசலப்பு' அதிகரித்திருக்கிறது!

'தனி நாடு' கோஷத்துச்கு எதிர்ப்பு தெரிவித்தும், 'ஐக்கிய இலங்கை'யிலும் 'தேசிய ஒற்றுமை'யிலும் தமக்குள்ள நம்பிக்கையைத் தெரிவித்தும், வி. பொன்னம்பலமும், அல்பிறட் துரையப்பாவும், தியாகராசாவும், விசுவநாதனும், மு(ட்டாள்கள்,) காங்கிரசை புதிதாக துவக்கியுள்ள அருளம்பலமும், இன்னும் விலாசமற்ற சிலதுகளும் அறிக்கைக்குமேல் அறிக்கை விடுத்துவருகிருர்கள்—நம்மை அழிப்பதையே ஒரே நோக்கமாகக் கொண்ட நாளேடுகளும் அவற்றுக்கு அளவற்ற முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தும் வருகின்றன! என்ன செய்வது நம்மிடமும் ஒரு நாளேடு இல்லையே இவற்றுக்கு உடனுக்குடன் சுடச் சுடப் பதில் கொடுப்பதற்கு!

நண்பா, தமிழர் கூட்டணியின் 'மே' திங்கள் தீர்மானத்தில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது தமிழ் ஈழ சுயாட்சி (Self Rule) பற்றியே தவிர தனி இராச்சியம் (Separate State) பற்றியல்ல! தமிழர் கூட்டணியின் 'தமிழ் ஈழ சுயாட்சி' பற்றிய தீர்மானத்தை புரிந்து கொள்ள முடியாமலோ, அல்லது வேண்டுமென்றே அதற்கு 'தனித் தமிழ் நாடு' என்று 'கலர்' கொடுத்து பிரச்சாரம் செய்யத் தொடங்கியது இந்த நாட்டு நாளேடுகளும் அரசாங்கத்துடன் ஒட்டியிருந்து தமிழினத்தின் கழுத்தை அறுத்துவரும் ஒத்துழைப்புத் தம்பிரான்களும்தான்!

செய்திகளைத் திரிப்பதையும், சுட்டுக் கதைகளை உருவாக்குவதையுமே தனது மூலதனமாகக்கொண்ட 'தினபதி'யோ 'தனித் தமிழ் நாட்டுத் தீர்மானத்தை தமிழர் கூட்டணி கைவிடப் போவதாக கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டு தனக்குத்தானே மகிழ்ந்திருக்கிறது! 'தனித் தமிழ் நாடு' என்று தமிழர் கூட்டணி தனது தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தாலன்ருே, அதைக் கைவிடும் பிரச்சினையும் எழ முடியும்! தமிழர் கூட்டணி எடுத்த தீர்மானம் தமிழ் ஈழத்துக்கு சுயாட்சி அமைப்பது பற்றியதுதான்! சுயாட்சிக்கோரிக்கையை 'தனி நாட்டுக் கோரிக்கையாக' மாற்றியமைத்த பெருமை இந்நாட்டுப் பத்திரிகைகளுக்கும் ஆளுங்கட்சியின் ஊதுகுழல் அடிமைகளுக்கும்தான் போய்ச்சேரவேண்டும்!

ஆம் நண்பா, 'தனி நாடு' பற்றி இந்நாட்டுத் 'தேசிய' பத்திரிகைகளும், பந்தம் பிடிப்போரும் நடத்திய பிரச்சாரத்தின் பலனுக—தமிழ் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் 'தனி நாடு' அமைத்தால் என்ன;—தமிழர்கள் ஏற்கெனவே தனி அரசு நடத்தியவர்கள்தானே; தமிழினம் ஏன்பிரிந்து வாழமுடியாது; என்றெல்லாம் இன்று சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிருர்கள் என்பது உண்மை! தமிழ் மக்களின் உள்ளங்களில் பிரிவினைக் கருத்தை வேரூன்றச் செய்து வருவது இந்நாட்டுப் பத்திரிகைகளும், ஆட்சியாளரின் நடவடிக்கைகளும் தான்!

எந்தக் கருத்து பலமாக எதிர்க்கப்படுகிறதோ அந்தக் கருத்தே மக்களின் மனங்களில் ஆழமாக இடம்பெறும்; இது இயற்கை நியதி. அதேபோல், அரசாங்கமும் அரசாங்கக்கட்சியில் ஒட்டியிருந்து வயிறு கழுவி வாழும் ஒத்துழைப்புத் தமிழர்களும் இந்நாட்டு நாளேடுகளும் கடுமையாக எதிர்க்க எதிர்க்கத்தான் தனித்தமிழ் நாட்டுக் கருத்து தமிழ் மக்களின் உள்ளங்களில் ஆழமாக இடம்பிடித்துவருகிறது! ஏன் நாம் பிரிந்து தனித்து வாழமுடியாது என்ற கேள்விக்குறியும் உருவாகிவருகிறது!

நண்பா, தமிழர் கூட்டணியின் தமிழ்ஈழ சுயாட்சித் தீர்மானம்பற்றி கருத்துக்கூறிய வெளிநாட்டு ஏடுகளையெல்லாம் துருவித்துருவிப் படித்தேன்; சென்னை 'இந்து' ஏடு, இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, தினமணி, நியூயார்க் டைம்ஸ், போன்ற ஏடுகளையெல்லாம் புரட்டிப் பார்த்தேன் —இந்த நிலை தோன்றுவதற்கு முழுமுதற் காரணம் சிங்கள அரசாங்கத்தின் குறுகிய இனவாதப் போக்குத்தான் என்பதை அவை திட்டவட்டமாக சுட்டிக் காட்டியுள்ளன.

தமிழர்களது ஜீவாதார அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் அரசியல் சட்டரீதியாக வழங்கி — தாம் இரண்டாந்தர நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டோம் என்று இன்று நொந்து போய்க் கிடக்கும் தமிழர்களை திருப்திப்படுத்த சிங்கள மக்களும் அவர்களது அரசாங்கமும் தவறியது தான் பிரச்சினை இவ்வளவு தூரம் சிக்கலானதற்கு காரணம் என்று எடுத்துக்காட்டியுள்ள அந்த ஏடுகள் எல்லாம் தமிழர்களின் உரிமைகளைவழங்க இலங்கைஅரசு தாமதமின்றி நடவடிக்கையெடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கின்றன!

அதே நேரத்தில் நண்பா, சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலும், சமசமாசக் கட்சியிலும், கம்யூனிஸ்ட் கட்சியிலும் மு(ட்டாள்கள்) காங்கிரசிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் 'தமிழர்கள்' சிலர் விடும் அறிக்கைகளைப் பார்க்கிறேன்! ஏமாற்றம்தான் எஞ்சுகிறது! இவர்களும் தமிழர்கள்தாஞ என்ற கேள்வியும் என் நெஞ்சுள் எழுகிறது!

தமிழர் கூட்டணியை - கூட்டணியின் கொள்கைகளை கன்ஞபின்ஞவென்று திட்டுகிருர்கள்; பரவாயில்லை — திட்டி விட்டுப் போகட்டும் — திட்டிஞல்தான் அவர்களது எஜமானர்கள் மனம் மகிழும் — அதன் பயஞக ஏதாவது அவர்களது மடியிலும் வந்து விழும் — பாவம் பிழைத்துப் போகட்டும் எங்களைக்காட்டி; என்று விட்டுவிடலாம்!

ஆஞல் தமிழர் கூட்டணியை திட்டிவிட்டு-தனிநாட்டுக் கொள்கையை வைது தீர்த்து விட்டு—இறுதியிலாவது ஒருவரியில் 'இந்தத் தமிழர் கூட்டணியை ஒழிக்கவேண்டுமாஞல், தமிழினத்தின் உரிமைகளை அரசியல் சட்டரீதியாக உடனடியாக வழங்குங்கள்' என்று தமது எஜமானர்களிடம் கூறுவார்களாஞல் இவர்களை கொஞ்சநஞ்சமாவது மானம் ரோசம், உள்ளவர்கள் என்று கூறிவிடலாம்!

அப்படிக் கூறும் திராணி. தெம்பு, தார்மீகபலம் இவர்களுக்கில்லை! அப்படிக் கூறிஞல் தமது எஜமானர்கள் 'நீயும் தமிழர் கூட்டணியின் ஏஜண்டோ' என்று கூறி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்களோ என்ற அச்சம் இவர்களுக்கு! அது மட்டுமன்றி, தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டம் அரசியல் நிர்ணயசபையில் உருவாகுவதற்கு ஒத்துழைப்புத் தந்து அதை ஆதரித்துக் கைதூக்கியவர்களுக்கு, அச்சட்டத்தை திருத்து என்று கேட்பதற்கு என்ன தார்மீகபலம் இருக்கமுடியும்?

தமிழினத்தின் உரிமைக்குப்போராடுவோரை எதிர்ப்பதையும், காட்டிக்கொடுப்பதையுமே தங்கள் அரசியல் வாழ்வாக கடந்த [illegible] அமைத்துக் கொண்ட எட்டப்பர் கூட்டத்திடம் இனத்தை வாழ வைக்கும் எண்ணம் கிஞ்சித்தும் இருக்க முடியுமா? எப்படி நீ அதை எதிர்பார்த்திட முடியும் என்று கேட்டிடுவாய் நண்பா— உண்மைதான்—இவர்களது 'தோற்றத்தை' மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிடவே இதை இங்கு குறிப்பிட்டேன்!

நண்பா, பொங்கியெழுந்துள்ள தமிழினத்தின் தேசிய விடுதலை உணர்ச்சி யெனும் பெரு வெள்ளத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்ற முட்டாள்தனமான நினைப்பில் திருவாளர் வ. பொன்னம்பலம், ஐந்து அம்சத்திட்டம் என்றும், ஐக்கிய இலங்கை என்றும், பிரதேச சுயாட்சி என்றும் ஏதோ எல்லாம் உழுத்துப் போன மரக்கட்டைகளை குறுக்கே போட முயற்சித்து வருவதைக் கவனித்திருப்பாய்! அதுவும் 'தமிழ் ஈழசுயாட்சி' பற்றி தமிழர் கூட்டணி எடுத்த தீர்மானத்தின் பின்னர் பொன்னம்பலத்தின் அவதி அதிகரித்துள்ளது!

'ஐக்கிய இலங்கை' எனும் சொல் இன்று தமிழ்மக்களுக்கு வேம்பாகக் கசந்திடும் ஒரு சொல்லாக மாறிவிட்டிருக்கிறதென்ருல் அதற்குக் காரணமே — 1948ம் ஆண்டு இந்தநாடு வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாள் முதலாக சிங்கள மக்களும் சிங்களத் தலைவர்களும், சிங்கள அரசாங்கமும் நடந்துகொண்ட முறைகள்தாம்!

'ஐக்கிய இலங்கை'யின் கீழ் பூரண சுதந்திரமும் சம உரிமைகளும் உள்ள ஒரு இனமாக இந்நாட்டில் வாழலாம் என்று நம்பித்தான் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் 'ஐக்கிய இலங்கை'யையே தம் குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றி வந்திருக்கிருர்கள். 'ஐக்கிய இலங்கை' தம்மை அடிமை நிலைக்குத் தள்ளும் என்று தமிழர்கள் அன்றே உணர்ந்திருந்தால்—'பாகிஸ் தான்' ஒன்றை இங்கும் வெகு சுலபமாக அன்று உருவாக்கியிருக்க முடியும்! ஆஞல், தமிழர்கள், சிங்களவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து 'ஐக்கிய இலங்கைக்குள்' வாழ கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக முயற்சி செய்து இன்று விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டிருக்கிருர்கள்.

'ஐக்கிய இலங்கை' என்ற போர்வையின் கீழே தங்கள் மொழி, இனம்,பிரதேசம் கலாசாரம், பாரம்பரியம், என்பனவற்றை சிங்களப் பெரும்பான்மை இனம் அழித்தொழிக்க எடுத்துவரும் நடவடிக்கைகளை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து உணர்ந்துவிட்டபடியிஞல்தான் 'ஐக்கிய இலங்கை' என்பது தமிழ் மக்களின் உள்ளங்களில் இன்று ஒரு கேள்விக்குறியாகிவிட்டது!

ஒற்றையாட்சியின் கீழ் சம அந்தஸ்துள்ள ஓர் ஐக்கிய இலங்கையில் ஒன்றுபட்டு வாழலாம் என்று கருதித்தான் தமிழ் காங்கிரஸ் முயன்று பார்த்தது; சமஷ்டி அமைப்பின் கீழ் ஓர் ஐக்கிய இலங்கையில் வாழலாம் என்று தமிழரசுக்கட்சி பெரு முயற்சியெடுத்தது; ஆஞல் சிங்கள அரசாங்கங்களின் தொடர்ச்சியான குறுகிய இனவாதப்போக்கு, இந்த முயற்சிகளை தூள்தூளாக்கி விட்டது! அதஞல்தான் 'ஐக்கிய இலங்கை' என்று பேசுபவர்களை இன்று தமிழ் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத்தொடங்கியிருக்கிருர்கள்.

இந்த நாடு உண்மையில் ஓர் ஐக்கிய இலங்கையாக திகழ்ந்திடவேண்டுமென்ருல்—ஐக்கிய இலங்கை ஐக்கிய இலங்கை என்று மூச்சுக்கு முன்னூறு தரம் மந்திரம் ஓதிப் பயனில்லை; இந்த நாட்டின இரண்டாவது பெரிய இனமான தமிழினத்தின் மொழி, இன, மத, பிரதேச ஆட்சியுரிமைகளை அரசியல் சட்டரீதியாக அங்கீகரிக்க பெரும்பான்மை இனம் முன்வரவேண்டும்! இதை எடுத்துச்சொல்லி —தமது அரசாங்கத்தை வற்புறுத்தி, தமிழினத்தின் உரிமைகளை வழங்கும்படி தூண்டுவதை விடுத்து, 'ஐக்கிய இலங்கை' ஜபத்திஞல், தமிழ் மக்களை ஏமாற்றிடலாமென்று நினைக்கிருர் வி. பொன்னம்பலம்!

'ஒற்றையாட்சியின் கீழ் பிரதேசசுயாட்சி' என்ற உழுத்துப்போன ஓர் கொள்கையை

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## நாடு எங்கே போகிறது?

இந்த நாடு ஜனநாயக அரசியல் நெறி முறையைப் பின்பற்றுகின்ற ஒரு நாடு என்றுதான் இந்நாட்டு மக்கள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள்தான் ஜனநாயகத்தின் உண்மையான காவலர்கள் என்று ஆட்சிபீடத்திலிருப்பவர்களும் தம்பட்டமடித்து வருகிறார்கள்.

ஆனால் நடைமுறையில் நாம் காண்பது என்ன?

ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டுவருகிறது— ஜனநாயக பாரம்பரியங்களும் நடைமுறைகளும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவருகின்றன.

இதற்கு எடுத்துக்காட்டாக நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் காட்ட முடியுமென்றாலும் மூன்றே மூன்று உதாரணங்களை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விருபுகிறோம்.

ஏனெனில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ்பதம் பார்த்தாலே போதுமல்லவா?

(1) புதிய அரசியல் சட்டத்தையொட்டி தமிழ் மக்களின் கருத்தையறிவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க முன்வந்து—ஒன்பது திங்களுக்கு முன் தமது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து-இடைத்தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு வழிவகுத்தார் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வநாயகம்!

ஜனநாயகக்களத்தில் மக்களின் தீர்ப்பே மகேசன்தீர்ப்பாகும். இந்தப் பெரும் தத்துவத்தை அடியொற்றி புதிய அரசியல் சட்டம் சம்பந்தமாக தமிழ் மக்களின் தீர்ப்பை அறிந்து—அதற்கு கட்டுப்பட தந்தை செல்வா முன்வந்தது மட்டுமல்ல—அரசாங்கமும் அதற்கு கட்டுப்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் அரசாங்கமோ ஜனநாயகக்கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் அலட்சியப்படுத்திவிட்டு — இடைத்தேர்தலை நடத்துங்கள் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை புறக்கணித்துவிட்டு — கடந்த ஒன்பது திங்களாக அவசரகாலச்சட்டத்தைக் காட்டி தேர்தலை ஒத்திவைத்து— ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்துவருகிறது. காங்கேசன்துறை வாக்காளர்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை மறுத்து வருகிறது.

(2) ஜனநாயகத்தின் மறுக்கமுடியாத அம்சங்களில் எழுத்துரிமை, பேச்சுரிமை, அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை ஆகியவை மிக முக்கியமானவை என்று நாமெல்லாம் அறிந்திருக்கிறோம்.

புதிய குடியரசு அரசியல் சட்டம் பற்றியும், அச்சட்டம் நடைமுறைக்குவந்த 1972ம் ஆண்டு மே 22ம் நாள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கடந்த ஆண்டு சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளையும் செய்திகளையும் தொகுத்து 'மே 22' என்ற தலைப்பில் தமிழர் கூட்டணியின் ஆதரவாளர் ஒருவர் நூலொன்றை வெளியிட்டார். அப்படி வெளியிட்ட காரணத்துக்காக அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டு இப்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி தேசிய அரசுப்பேரவையில் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பிரச்சினை கிளப்பியபோது—அதற்கு பாதுகாப்பு துணை அமைச்சர் அளித்தபதில் நாம் ஜனநாயக நாட்டில் தான் வாழுகிறோமா என்ற சந்தேகத்தையே தோற்றுவிப்பதாக இருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரான பிரசுரங்களை வெளியிட்டதற்காக அந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பதே பாதுகாப்பு துணை அமைச்சர் தந்த விளக்கமாகும்.

அப்படியானால்— ஜனநாயக நாடு என்று கூறப்படும் இந்நாட்டில் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை இந்நாட்டுப் பிரஜை யொருவருக்கு கிடையாதா? அரசாங்கத்தை எதிர்த்து பிரசுரங்களை வெளியிடும் உரிமை இந்நாட்டுப் பிரஜைகளுக்கு கிடையாதா? எழுத்துரிமை பேச்சுரிமை, பிரசுர உரிமை—ஆகிய ஜனநாயகத்தின் ஆணிவேர் உரிமைகள் இந்நாட்டுப் பிரஜைகளுக்கு கிடையாதா?

(3) ஜனநாயகத்தின் தொட்டில்களாக விளங்கும் உள்ளூராட்சி மன்றங்கள்—குறிப்பாக அரசாங்கத்துக்கு எதிரணியிலுள்ளவர்களின் ஆதிக்கத்திலிருக்கும் மன்றங்கள் — திடீர் திடீரெனக் கலைக்கப்பட்டு வருகின்றன — அரசாங்கத்துக்கு வேண்டியவர்களின் நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கால எல்லைகள் மட்டும் நீடிக்கப்பட்டு வருகின்றன.

திருக்கோணமலை, கொக்குவில், பண்டத்தரிப்பு -- இப்படி தமிழ் ஈழத்திலுள்ள எத்தனையோ உள்ளூராட்சி மன்றங்கள் இதுவரை கலைக்கப்பட்டு விட்டன. இறுதியாக இந்த வரிசையில் மட்டக்களப்பு மாநகராட்சியும் சேர்க்கப்பட்டுவிட்டது!

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆயுள்காலம் சட்டப்படி மேலும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கக்கூடிய நிலையில் மேற்படி மாநகர சபை சென்றவாரம் திடுதிப்பென்று உள்ளூராட்சி அமைச்சினால் கலைக்கப்பட்டு இருக்கிறது! இதன் மூலம் ஜனநாயகம் மேலும் கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது.

மத்தியில் குவிந்துள்ள அதிகாரம் மாவட்டங்களுக்கு பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்து வளர்ந்துவரும் இக்காலத்தில்—ஏற்கெனவே மக்களுக்கு இருந்து வந்த உள்ளூராட்சி அதிகாரங்களையும் மத்திய அரசாங்கமே இப்படிக் கைப்பற்றுவது பெருங்கேலிக்கூத்தாகும். கண்டிக்கப்படத்தக்கதாகும்.

இன்று மக்கள் இந்த அரசாங்கத்தை நோக்கி ஒரே ஒரு கேள்வி கேட்கிறார்கள்—

இந்த நாடு எதைநோக்கிப்போகிறது? சர்வாதிகாரத்தை நோக்கித்தான் என்றால் அதை பகிரங்கமாக—தைரியமாக கூறிவிடுங்கள்!

—ஜனநாயக போர்வையின் கீழ் சர்வாதிகார நாடகம் ஆடாதீர்கள்! போர்வையை கழற்றிவிடுங்கள்!

## அசீசின் குத்துக்கரணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அஸீஸ் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிவதில் பலரும் ஆர்வம் காட்டினர்.

அந்தச் சமயத்தில், மலைநாட்டுத்தமிழர்களை கிழக்கு மாகாணத்தில் அவர்கள் குடியேறியுள்ள நிலங்களை விட்டு வெளியேற்றுவதை பாரதூரமாகக் கண்டித்து ஜனாப் அஸீஸ், அமைச்சர் பீலிக்சுக்கு ஒரு கடிதம்எழுதியிருப்பதாக 2. 6. 73 வீரகேசரியில் பென்னம் பெரிய எழுத்துக்களில் அசிசின் படத்துடன் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

''மலையகத்திலிருந்து நாட்டின் கிழக்கு மாகாணத்தில் குடிபெயர்ந்து சில பகுதிகளை வளம்படுத்தி உணவுற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கான விசேட சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டு வருவதாக பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். இது எனக்கு மிகவும் அதிர்ச்சியைத் தந்தது'' என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அஸீஸ், குடியேறிய தோட்டத்தொழிலாளர் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்றும் அமைச்சரைக் கேட்டிருந்தார்.

இது கண்டு பலரும் மகிழ்ந்தனர். ஆனால் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஜனாப் அசிசினதும் ஏனையோரதும் வேண்டுகோள்களை தூக்கியெறிந்துவிட்டு (மலைநாட்டுத் தமிழர் குடியேற்றத்தை தடுக்கும் முக்கியநோக்குடன்) வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்கக் காணிகளில் சட்ட விரோத குடியேற்றத்தை தடுப்பதற்காக அவசரகால சட்ட விதிகளை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

அவசர காலச் சட்ட விதிகளைக் கண்டதும் வாரிச்சுருட்டிக்கொண்டு தமது முந்திய பல்லவியை மாற்றி அரசாங்கத்துக்கு ஆதரவாக இப்போது அனுபல்லவி பாடியிருக்கிறார் ஜனாப் அஸீஸ்.

'இன்று அரசு அவசர காலச் சட்டத்தைப் பிரயோகித்து அரசு காணிகளில் அத்து மீறிக் குடியேறுபவர்களை தடுக்கவிருக்கிறது. அத்து மீறிக் குடியேறுபவர்களை அப்புறப்படுத்த இப்படியான சட்டம் கொண்டுவரா விட்டால் அரசு காணிகளில் ஏராளமானவர்கள் சட்ட விரோதமாகக் குடியேறி விடுவார்கள். ஆகவேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது—'

என்று அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார் ஜனாப் அஸீஸ்!

## காங்கேசன் துறை வாக்காளரின் கேள்வி!

''வடக்கு கிழக்கு மாகாணங்களில் இப்போது கவலை தரக்கூடிய சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை. காரை நகர்ப் பகுதியில் நடைபெற்ற சாதிச்சண்டையைதவிர வேறு அசம்பாவிதங்கள் நடக்கவில்லை''

—பத்திரிகையாளர் மாநாட்டில் பொலிஸ் தலைவர் ஸ்டான்லி சேனநாயகா.(தினகரன் 28-6-73)

— அப்படியானால் வடக்கில் வன்முறை நடப்பதாக அரசாங்கம் கூறுவது காங்கேசன் துறை இடைத்தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு கூறப்படும் பொய்தானே! பொலிஸ் தலைவரின் அறிக்கைக்கு பிறகாவது காங்கேசன் துறை இடைத்தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை யெடுக்குமா என்று கேட்கிறார் காங்கேசன் துறை தொகுதி வாக்காளர் ஒருவர்.

(ஆதாரம் வீரகேசரி 26-6-73)

ஜனாப் அசீசின் இக் குத்துக்கரணம் பற்றியே மலையகத்திலும் மற்றும் இடங்களிலும் இப்போது சுட்டிக் காட்டிப் பேசப்படுகிறது.

இதே வேளையில் அரசாங்கத்தை விட்டு ஜனாப் அஸீஸ் வெளியேற வேண்டுமென்ற கோரிக்கை அவரது கட்சிக்குள்ளேயே பெரிய அளவில் கிளப்பப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாரபட்சம் காட்டி புறக்கணித்து வருவதற்காகவும், தமிழர் விரோத அரசாங்கத்தை ஜனாப் அஸீஸ் ஆதரிக்கக் கூடாதென்றும் விட்டுவெளியேற வேண்டுமென்றும் ஜ. தொ. கா. வின் அட்டன் மாவட்டத் தலைவர் கே. எஸ். சின்னையா அண்மையில் ஒரு கூட்டத்தில் அஸீசையும் வைத்துக்கொண்டு முழக்கமிட்டிருக்கிறார். திரு. சின்னையாவின் கருத்துக்கு ஜ. தொ. கா. வுக்குள்ளும் பெருத்த ஆதரவு இருப்பதாக சொல்லப்படுகிறது.

இதற்குப் பதிலளித்த ஜனாப் அஸீஸ், வடக்கு, கிழக்கு, மலைநாடு, என்று தமிழர்களைப் பேதம் காட்டிப் பேசியும் வடக்கு, கிழக்கு தமிழர்களோடு தொண்டமான் சேர்ந்து விட்டதாக குற்றம் சுமத்தியும் தற்காலிகமாக தட்டிக்கழித்துச் சமாளித்துக் கொண்டாராம்.

## தமிழர் கூட்டணியுடன் ஒத்துழைக்க அ. எ. வி. சங்கம் வேண்டுகோள்!

'தமிழர்களை, தமிழைப் பாதிக்கும் விடயங்களில் சங்கம் முன்னின்று உழைத்தது. சங்கத்தின் பெரு முயற்சியினாலும் பொது மக்களினது ஒத்துழைப்பாலும், உருவாக்கப்பட்டதே தமிழர் கூட்டணி தமிழர் கூட்டணியுடன் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் தமிழ் இயக்கங்களும் சேர்ந்து ஒத்துழைத்து ஒரு நல்ல முடிவைப் பெறவேண்டும்.

'தமிழர்களைப் பொறுத்த வரையிலும், தமிழ் அரசாங்க ஊழியரைப் பொறுத்தவரையிலும், எதிர்காலத்தில் கரடுமுரடான பாதைக்கு ஊடாகவே செல்ல வேண்டியுள்ளது. அதைப் பொருட்படுத்தாமல் எமது உரிமைகளைப்பெற ஆவன செய்யவேண்டும். தியாகங்கள் செய்யாமல் வெற்று உரிமைகள் நீடிப்பதில்லை. தியாகம் செய்தவனுக்கே சுதந்திரத்தின் புனிதம் தெரியும். புனிதமாக வாழ விரும்பும் எந்த மனிதனும் அடக்கப்பட்டு அடிமையாக வாழவிரும்பமாட்டான்; ஒரு நாட்டில் மொழிவழியில் இரு பெரும்பான்மையினம் வாழும் பொழுது ஓர் இனம் சுதந்திரமாகவும், மற்ற இனம் சுருண்டும் வாழ முடியாது.

—இவ்வாறு அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கையில் சங்கப் பொதுச் செயலாளர் நா. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். சங்கத்தின் 12வது ஆண்டு மாநாடு 30-6-73ல் வவுனியாவில் நடைபெறுகிறது.

## மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கையில் ஜனநாயக பாரம்பரியங்கள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன என்று பொது மக்களும் தேசிய பேரவை உறுப்பினர்களும் குறை கூறிக் கொண்டு வரும் இவ்வேளையில் 18 மாதங்கள் இன்னும் தொடர்ந்து இருக்கவேண்டிய மட்டக்களப்பு மாநகர சபையை திடீர் என்று கலைக்க அப்படி என்ன அவசரம் வந்தது?

'மட்டக்களப்பு மாநகர சபையை கலைத்திருப்பது ஏற்கெனவே திட்டமிட்ட அரசியல் காரணங்களை உள்ளடக்கிய ஒரு செயலாகும் எனப் பொதுமக்கள் கருதுவதில் நியாயம் இருக்கிறது.

ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆட்சிபுரிய 1970ம் ஆண்டு அனுமதி பெற்ற ஆட்சியாளர்கள், புதிய அரசியல் சட்டத்தை தயாரித்து அது நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து மேலும் 5 ஆண்டுகளுக்கு பதவியை நீடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆயுட்காலத்தை ஒன்றரை ஆண்டுகளால் குறைத்து, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள்'!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருக்கோணமலை ஆணையாளர் அலுவலகத்தில்

# பௌத்தக்கொடி ஏற்றப்பட்டதேன்?

## சைவத் தமிழ் மக்களின் வரிப் பணத்தில் குறுகிய மத வெறிக் கூத்து!

## ஆணையாளர் ஆட்சியின் அலங்கோலம் உள்ளூராட்சி அமைச்சருக்கு ஆட்சேபம்!

திருகோணமலை நகரசபை உள்ளூராட்சி அமைச்சரினால் கலைக்கப்பட்டு நகர நிர்வாகம் சிங்கள ஆணையாளர் ஒருவரின் கீழ் சில மாதங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. புதிய ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் திருக்கோணமலை சீரழிவதாக குற்றம் சுமத்தி திருக்கோணமலை மத்திய வீதியைச்சேர்ந்த திரு. இ. சோமசுந்தரம் உள்ளூராட்சி, உள்நாட்டு, நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு அண்மையில் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

நான் எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானவனல்ல. கட்சி என்ற கட்டுப்பாட்டில் எனக்கு நம்பிக்கையில்லை. அதே நேரத்தில் எனது திருக்கோணமலை நகரம் திரு சேர் நகர்மாக உயர்வடைய வேண்டும் என்பதில் எனக்கு பூரண விருப்பமுண்டு. இன்று திருக்கோணமலை நகரசபை கலைக்கப்பட்டு ஆணையாளர் ஆணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆணையாளர் உதவியுடன் திருகோணமலை முன்னேறப்பட்டுவிடும் என்று கனவு கண்ட மக்களுக்கு மீண்டும் ஆணையாளர்களின் கீழும் அதே கதிதானா? ஆணையாளர் நியமிக்கப்பட்டு தற்போது பல மாதங்களாகி விட்டன. ஆனால் ஆணையாளர் ஆற்றிய சேவைதான் யாது? வீதிகளில் நிறைந்து வழியும் குப்பைகளிலிருந்து நமது நகருக்கு விமோசனம் கிடைத்ததா? வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டு சாக்கடைகளில் உள்ள சேற்று மண் அப்புறப் படுத்தப்பட்டதா? நகர மக்கள் சீரான மின்சாரத்தைப் பாவிக்க முடிகிறதா? இல்லை.

பல ஆண்டுகளாக மின் பாவனையாளர்களின் மின் தொடர்புக் கம்பிகள் புதுப்பிக்கப்படாமல் பழையனவாக இருப்பதில், நாளுக்கு நாள் கம்பிகள் அறுந்து வீதிகளில் விழுவதும் அதனை மீண்டும் சரியானபடி பொருந்தாமல் நாட்டுமக்களுக்கு ஆபத்தை விளைவிப்பதும் உங்களுக்கே நன்றாக இருக்கின்றதா?

உள்ளூராட்சி மன்றங்கள் நகரின் தேவைகளைப் பூர்த்தி செய்தும் நகரில் சுகாதாரத்தை ஏற்படுத்தியும் நல்ல முறையில் இயங்குவதை விட்டு விட்டு வெறும் மன்றமும்—ஆணையாளரும் இருப்பதில் என்ன பயன்? நகரைக் கவனிக்கவேண்டும்—கவனிப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படவேண்டும். இப்படியான கவனிப்புகளால்தான் நகரம் நலம் பெற முடியும்.

இப்படி ஒவ்வொரு நகரமும நலம் பெற்றால் தான் முழுநாட்டின் நலத்தையும் வளத்தையும் எம்மால் காண முடியும். இதை விடுத்து வீணே மன்றங்கள் இயங்குவதில் ஒரு வகையான பிரயோசனமும் இல்லை.

இன்று திருக்கோணமலையில் மழை பெய்யத் தொடங்கிவிட்டால் போதும் தெருவில் உள்ள அத்தனை மின் விளக்குகளும் அணைந்து விடுகின்றன. அதனைத் தொடர்ந்து வீட்டு மின்சார விளக்குகளும் அணைந்து நகரமே இருளில் மூழ்கி விடுகின்றது. இத்தகைய சாபக்கேட்டில் இருந்து எமது நகரம் விடுபட இந்த ஆணையாளர்கள் ஆவன செய்ய மாட்டார்களா?

மீன் சந்தையில் மீன்களை நிலத்தில் போட்டு விற்பனை செய்கிறார்கள். இதனைத் தொடர்ந்து அநுமதித்தால் மக்களின் சுகவாழ்வுக்கு ஆபத்தாகும். இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அவசியத்தை இது நாள் வரை இவர்கள் உணரவில்லை.

பெரியமைதானத்தில் அமைந்துள்ள சட்ட விரோதக் கட்டடங்களையும், மீன் சந்தைக்கு பின் பகுதியில் அமைந்துள்ள முறையற்ற ஐஸ் வாடிகளையும் அகற்ற இது நாள் வரை முன் வராதது ஏன்? அதே நேரத்தில் 'ராஸ்ஸ்போமர்' அமைப்பதற்கு பெரிய மைதானத்தில் கட்டடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். இப்பெரிய மைதானம் நகரசபைக்கு சொந்தமானது அல்ல. அதே வேளையில் பாதுகாப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையில் நெரிசல் உள்ள பகுதியில் முன் யோசனையின்றி பஸ் நிலையத்திற்கு முன்பாகவும் 'டக்சி' ஸ்டாண்டுக்கு பின்பாகவும் அமைக்கவேண்டிய அவசரம் என்ன? ஒதுக்குப்புறமாக ஒரு இடத்தை தெரிவு செய்து அதனை அமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

பெரியமைதானத்தை சுற்றிக் கட்டப்பட்டுள்ள கடைகளை அகற்றவேண்டும். என்பது பொது மக்களின் வேண்டுகோளாகும். ஆனால் ஆணையாளர் இன்னும் சில கடைகளை திறப்பதற்கு உதவியாக இருக்கிறார். இவரின் செயலால் இன்று பெரியமைதானத்தில் சட்ட விரோத வியாபாரிகள் சபைக்கு எவ்வித கட்டணமும் செலுத்தாமல் வியாபாரம் செய்கிறார்கள். இது முறையாகுமா?

சோலைவரிப் பணத்தை மக்களைகசக்கி அறவிடுவதன் மூலம் ஆணையாளர் தனது கடமை முடிந்ததாகக் கருதக் கூடாது. நகர மக்களை கசக்கி வரி அறவிடுவது நகர சபையின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும். அதிகாரம் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பது முன்னைய நகர சபையின் மீது உள்ள குற்றச் சாட்டுகளில் ஒன்றாகும். ஆனால் இன்றைய ஆணையாளர் தனது அதிகாரத்தை கேவலப்படுத்துகிறார் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அவரது ஆணையின் கீழ் இயங்கும் ஆணையாளர் அலுவலகத்தில் பௌத்தக்கொடி பறக்கவிடப்பட்டது மல்லாமல் அதிகமான மின் விளக்குகள் இட்டு அதனை அலங்கரிப்பதும் அவரது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும்.

சைவ தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் திருக்கோணமலை அந்த மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அலுவலகத

(8-ம் பக்கம் பார்க்க)

---

# 'பொதுவரி வடிவம்' தமிழை அழிக்கும் மற்றோர் திட்டமிட்ட சதி!

## தமிழினமே! விழித்திரு! விழித்தெழு!

ஈழநாட்டிலிருந்து தமிழ் மக்களை அழித்து ஒழித்து விடுவதற்கு பல உபாயங்கள், சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தருக்கின்றன; வருகின்றன. அவற்றில் முக்கியமானது, தமிழ் மக்களின் உயிர்மூச்சாகிய தமிழ்மொழியை அழித்து ஒழித்து விடும் சதித் திட்டமாகும்.

இந்தச் சதித் திட்டத்தின்படி சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக்கப்பட்டு தமிழ்மொழி- சிங்களமொழி தோன்றுவதற்கு முன்பிருந்தே இந்த நாட்டில் பேசப்பட்டு வந்த நம் தாய்மொழி, சிங்களமொழியே வளர்வதற்கு உதவியாகவிருந்த தமிழ்மொழி—ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி இந்த நாட்டிலிருந்து அழிக்கப்பட்டு தமிழர்களும் இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்படும் சதித் திட்டத்தை. நிறைவேற்றுவதற்கு, அடுத்தபடியாக தமிழுக்கும் சிங்களத்துக்கும் பொதுவான வரிவடிவம் கண்டுபிடிக்கவேண்டுமென்று, சதிக்கு ஒரு அத்திவாரம் போடப்பட்டுள்ளது. (பொதுவான வரிவடிவம் கொண்டுவரவேண்டும் என்ற கூக்குரல் வெகுவிரைவில் எழக்கூடும்.)

இந்தச் சதியை சுதந்திரன் தனது 17.6.73 இதழ் ஆசிரியர் தலையங்கத்தில் எடுத்துக் காட்டியிருப்பதை தமிழ் மக்கள் எல்லோரும் மிகுந்த கரிசனையோடு கவனிக்க வேண்டும். காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். சிங்களத்துக்கும் தமிழுக்கும் பொது வரிவடிவம் கண்டுபிடிக்கவேண்டுமென்ற யோசனையைக் கொண்டுவந்தவர் ஒரு உதவி ஆணையாளர்தானே என்று எண்ணி நாம் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது.

சிங்களம் மட்டும் அரசகரும மொழியாகவேண்டுமென்ற விதையும் இப்படித்தானே யாரோ ஒரு அநாமதேயப் பேர்வழியால் விதைக்கப்பட்டது!

பெரும்பான்மைப் பலத்தைச் சிறுபான்மை மக்களுக்கெதிராக, மனச்சாட்சி எதுவுமின்றி, நீதி நியாமின்றிப் பாவிக்கும் பெரும்பான்மையினர் பதவி ஆசையினாலோ, பயத்தினாலோ அவர்களை ஆதரிக்கும் சில தமிழர்களின் ஒப்புதலோடு வெகுவிரைவில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் பொதுவரி வடிவம் என்று ஒன்றைக்கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அப்படிக் கொண்டுவரப்படும் பொதுவரி வடிவம் பெரும்பான்மை மக்களின் மொழியாகியசிங்களமொழியின் வரிவடிவமாகவே இருக்கும் என்பதைச் சொல்லத் தேவை இல்லையே!

''செல்லையா குமாரசூரியா இங்கே வா மச்சான்'' என்பது முழுவதும் சிங்கள வரிவடிவத்தில்தான் இருக்கும். 'செ'னாவிலிருந்து 'ன்' னன்னா வரையில் சிங்கள எழுத்துக்கள்தான் இருக்கும். மச்சான் என்பது 'மச்சாங்' என்றும் எழுதப்படும்.

''සෙල්ලයියා කුමාරසූරියර් ඉංගේ වා මච්චාං''.

இதுதான் சிங்களத்துக்கும் தமிழுக்கும் உள்ள பொது வரிவடிவம் என்று சொல்லப்படும். இதைத் தமிழர்களில் சிலரும் ஏற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொள்வதோடல்லாமல் அதை ஏனைய தமிழர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் வாதாடுவார்கள். ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பவர்களை ஏசித் திட்டவும் செய்வார்கள்!

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள், தமிழ் மக்களுக்கு முன்பின் இவர்கள் யார் என்று தெரிந்திராதவர்கள் தமிழ் மக்களுக்காக எதுவும் செய்திராதவர்கள், தமிழ் மக்களால் சிபார்சு செய்யப்படாதவர்கள் 'திடீர்' மந்திரிகளாகி அதை ஆதரிக்கக் கூடும்! தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள், பெரும்பான்மையினர், அவர்கள் என்னதான் தீங்குகள் செய்தாலும், அவர்களை எதிர்த்துப் போராடப் பயந்து தொடை நடுங்கி, அதை ஆதரிக்கக்கூடும்!

தமிழ்மொழியையும் தமிழர்களையும் காப்பாற்றுபவர்களோடு சேர்ந்து நிற்பார்கள் என்று எண்ணித் தமிழ் மக்களால் தேர்ந்து அனுப்பப்பட்ட இரண்டொருவர், தமிழ்மொழியும் தமிழர்க [illegible] போகட்டும், தமக்கு வாய்ப்பிருக்கும்போது தமக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை வசதிக்கும் வளமாகக் கிடைத்தால்போதும் என்று நினைத்து, அதை ஆதரிக்கக்கூடும்! தமிழ் மக்களால் தள்ளிவைக்கப்பட்ட இரண்டொருவர்களும் தங்களுக்கு சில பல சலுகைகள் கிடைக்குமென்பதினாலும் தாங்கள் சில பேருக்கு ஒரு சில சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கமுடியுமென்பதற்காகவும் அதை ஆதரிக்கக் கூடும்!

தான் பின்பற்றும் எங்கோ உள்ள ஒரு நாட்டின் சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கும் இன்னொருவருக்கு மந்திரிப் பதவி கிடைத்திருக்கின்றது என்பதற்காக எவராவது அதை ஆதரிக்கக்கூடும்!

இப்படியாக, தமிழ் மக்களின் மத்தியில் உள்ள சில 'சூரியர்'களும் 'மாட்டேன்' களும்''பவித் தியாகி''களும் ''அம்பலங்'' களும் 'ராஜா'க் களும் ''துரோகப்பா''க் களும் இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேர்களுக்கும் காலில் போடுவதற்குச் செருப்புக் கிடைக்கும் வரை தன்காலில் செருப்புப்போட மறுக்கும் ''பொன்'' மனம் படைத்த பொதுவுடமை வாதிகளும் இந்தப் பொது வரிவடிவம் என்ற சதித் திட்டத்தை ஆதரித்து வரவேற்கக்கூடும்!

ஆகவே தமிழ்மொழியின் மீதும் தமிழ் மக்கள் மீதும் அக்கறைகொண்ட தமிழ் மக்கள் யாவரும் விழிப்பாக இருக்கவேண்டும். முக்கியமாக, தமிழ் மக்கள் மத்தியில் துரோகிகளாக இருப்பவர்களைப் பற்றி மிகவும் கவனமாகஇருக்கவேண்டும்.

—அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (15)




வாழ்க்கையில் எது நடக்காது என்று நினைக்கின்றோமோ அது சில வேளைகளில் நடந்து விடுகின்றது. அந்தச் சமயத்தில் எந்த நிதான புத்தி உள்ளவர்களும் கணநேரம் அதிர்ச்சிக்குள்ளாகி விடுகிறார்கள். அப்படித்தான் சோமசுந்தரமும் ராதாலட்சுமி பற்றி அறிந்ததும் ஒரு கணம் தன்னை மறந்து அலறினார். அப்புறம் சாந்தமாகினார்.

அவள் சிறுவயது முதலே கர்வமும், மற்றவர்களை அலட்சியப்படுத்தும் மனமும் கொண்டவளாக இருந்து வந்தாள். ஆண்கள் விடயத்தில் கண்டிப்பு நிறைந்தவள். அவளே தன்னை ஏமாற்றி இப்படியெல்லாம் நடந்துகொண்டாள் என்று நினைத்த பொழுது அவர் பித்துப் பிடித்தவர் போலானார். செய்வது இன்னதென்று அறியாது சிலகணம் ஸ்தம்பித்து நின்றவர், பின்னர் ராதாலட்சுமியின் அறை நோக்கிச்சென்றார். ராதாலட்சுமி சிந்தனை வசமாக நின்றிருந்தாள்.

'ராதா' என்று வழமை போல அழைத்தார் சோமசுந்தரம்.

'அப்பா' என்று திடுக்கிட்டுத் திரும்பினாள் ராதாலட்சுமி.

'என்னம்மா இரண்டு மூன்று நாட்களாக ஒரு மாதிரி இருக்கே. நன்றாகச் சாப்பிடுவதில்லையென்றும் கவிதா சொன்னாள். உடம்புக்கு...'

'ஒன்றுமில்லையப்பா. சும்மா தலைவலி.'

'உனக்குத் தலைவலியோ என்னவோ, உன் முகம் சோர்ந்ததும் என் மனம் சோர்ந்து விடுகின்றது. நீ பேராதனைக்குப் பரீட்சைக்குப் போன பின்னர் எனக்கும் பழைய படி "ஹாட் அட்ராக்" வந்து விட்டது. என் நிலமை எப்ப எப்படி ஆகுமோ என்று வேறு பயமாயிருக்கு." என்றபொழுது அவர் விழிகளில் நீர் தேங்கி நின்றது.

அதைப் பார்த்த ராதாலட்சுமி தன்னையும், தன்னைப் பற்றிய நினைவுகளையும் உதறிவிட்டு, அவர் கரங்களைப் பற்றி உட்கார வைத்தாள்.

'பரீட்சை முடிந்துவிட்டது தானே. இனியும் கல்லூரிக்குப் போகணுமா?'

'இல்லேப்பா இனி நான் போகப்போறதில்லை. உங்களருகிலேயே இருந்து உங்களைக் கவனிக்கப்போகின்றேன்.

'பைத்தியக்காரப் பெண்ணம்மா நீ. என் அருகில் நீ இருந்தால் உன் வாழ்க்கை;'

'அப்பா! சிறு வயதிலேயே அம்மாவை இழந்த எனக்குத் தாயும் தந்தையுமாக இருந்து மற்றப் பிள்ளைகளுக்குக் கொடுக்காத சுதந்திரம், உரிமை யாவற்றையும் தந்து என்னைப் பார்த்தீங்களே. அதற்கு நான் எப்பிறவியில் கடமை செய்து முடிப்பேனப்பா?

'நான் எனது கடமையைத் தான் செய்தேன். இன்னும் ஒரு பெரிய கடமை இருக்கின்றது. அது முடிந்தால் எனக்கு வேறு கவலையே இந்த உலகத்தில் இல்லை அம்மா.'

'என்னப்பா?'

'உன் திருமணம்'

'அப்பா அதற்கு இப்பொழுது என்ன அவசரம்?'

'அவசரம் மட்டுமல்ல. அவசியமும் கூட. இருந்தாற் போல எனக்கொன்றாகி விட்டால்...'

'அப்பா! அப்படிச்சொல்லாதீங்கப்பா.'

'எமக்கிருக்கும் பாசப் பிணைப்புகளை வைத்து எப்படி நாம் கணக்கிட்டாலும், அவன் ஒருவன் எழுதி வைத்த கணக்கிலிருந்து யாருமே தப்ப முடியாது. அதற்குள் நாம் செய்வதைச் செய்துவிட வேண்டும் இல்லையா அம்மா?'

'ஆமாப்பா. அப்பா உங்களுக்கு...' என்று இழுத்து நிறுத்தினாள் ராதா.

'சொல்லம்மா என்னிடம் சொல்ல என்ன வெட்கம். ஐந்து பிள்ளைகள் இருந்தும் என்னோடு இருப்பது நீயும் கவிதாவும்தான். உன் அண்ணனும் அக்கா புருஷனும் லண்டனிலிருந்தே உனக்கு மாப்பிள்ளை தேடுகின்றார்கள். வீட்டிலிருக்கும் நானே இதுவரை அதுபற்றிச் சிந்திக்காமல் இருந்துவிட்டேன்.'

'அப்பா! உங்கள் மகளுக்கு வரவேண்டிய கணவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கின்றீர்கள்?' என்று திடீரெனக் கேட்டு விட்டாள் ராதாலட்சுமி.

'அம்மா ராதா நீ...நீ...' என்றவர் சில நிமிடங்கள் மௌனமாயிருந்தார். அப்புறம் சிரித்துக் கொண்டே,' இந்தக்காலத்துப் பிள்ளைகள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எவனையாவது இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தி விட்டுப் பெற்றோருடன் பேரம் பேசுகின்ற காலத்தில் எனக்கு வரவேண்டிய மருமகன் எப்படியிருக்க வேண்டுமென்று கேட்கின்றாய் இல்லையா ராதா?'

'ஆமாப்பா'

'அம்மா ராதா நீ யாரை யாவது மனதில்...' என்று அவளைப் பார்த்தார்.

தன் மன திலுள்ளதைக் கூறிவிடுவோமா என்று ஒரு கணம் நினைத்தாள். மறு கணம் தகப்பனுடைய மனக் கருத்தை அறிந்து அதன் பின்பு கூறலாம் என்று நினைத்தவளாகத் தன்னைத் தானே திடப்படுத்திக் கொண்டு, 'சொல்லுங்களப்பா' என்று குழைந்தாள்.

'ராதா! எனக்கு வரும் மருமகன் என் மகளைக் கண் கலங்காது வைத்துப்பார்க்கக் கூடியவனாக இருக்க வேண்டும். அது மட்டுமில்லையம்மா. உன் அக்காமாரின் கணவன்மார்களை விட அந்தஸ்திலும், செல்வாக்கிலும் உயர்ந்தவனாக இருக்கவேண்டும். ராதாலட்சுமிக்கு நிகர் வேறு யாருமே இல்லாமல் இருக்கக் கூடிய உயர்ந்த அந்தஸ்துள்ள மருமகனாக இருக்க வேண்டும்.' என்று அவர் கூறும்பொழுது ராதாலட்சுமியின் மனக்கோட்டைகள் யாவும் சிதறிச் சுக்கு நூறாகின. வாசுதேவனின் உருவம் அவள் இதய அரங்கில் நின்று சிரித்துக் கேலி செய்வது போன்ற பிரமை! அவள் சித்தம் தடுமாறி நின்றாள்.

'என்னம்மா நான் ஏதோ கூறுகின்றேன். நீ அழுகின்றாயா?' என்றார்.

'இல்லையப்பா இது...இது...' என்று தடுமாறினாள்.

நாடகத் தொடர்கதை

அவளையறியாமலேயே அவள் விழிகள் உகுத்த நீரைத் துடைத்துக்கொண்டாள்.

'ஓ... ஆனந்தக் கண்ணீரா?' என்று சிரித்துக் கொண்டே மகளை அணைத்துக்கொண்டார் சோமசுந்தரம்.

'அம்மா ராதா! ஒவ்வொருவருடைய மனம் போலத்தான் மாங்கல்யம் வந்து அமைகின்றது. நல்லது கெட்டது என்று எதை நாம் ஒதுக்கவோ விரும்பவோ முடியாதம்மா. கல்யாணத்தின் முன்பு நல்லவனாக இருப்பவன் கல்யாணமான பின்புகெட்டுப்போய் விடுகின்றான். கெட்டவர்களாயிருந்த எத்தனையோ பேர் திருமணமான பின்பு திருந்திவிடுகின்றார்கள். அது அவரவர் தலையெழுத்தைப் பொறுத்தது. நானோ அல்லது நீயோ ஒன்றை விரும்பி இதைத்தான் செய்யணும் என்று நின்றால் கூட சில சமயம் நிறைவேறாது போய்விடுவதுண்டு. எதிர் பாராத ஒன்று திடீரென நிறைவேறி விடுகின்றது. 'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்பார்கள் பெரியோர்கள். கடல்கடந்து அந்நிய நாட்டிலிருந்து உன் உடன் பிறந்தவன் ஒருவனை நிர்ணயித்து எழுதியுள்ளான். எனக்கும் அதில் பூரண திருப்தி. நான் சாவதற்கு முன் உன் திருமணத்தைக் கண் குளிரக்காண வேண்டும்.' என்று கூறிவிட்டு எழுந்தார் சோமசுந்தரம்.

ஒரு இடத்திலிருந்து எந்தக் குறிக்கு இலக்கு வைத்தால் சுலபமாக வேலையை முடித்து ஆதாயம் பெறலாம் என்ற வியாபார தந்திரம் புரிந்தவர் சோமசுந்தரம். அவருடைய குறி தவறவில்லை. எந்த விதமான எதிர்ப்புமின்றியே தான் கூறவேண்டியதைக் கூறியதுடன் அவள் மனதையும் சாந்தப்படுத்தி விட்டார். அவர் மன நிறைவுடன் அறையை விட்டு வெளியேறிய வேளையில் மன அமைதியின்றிப் படுக்கையில் விழுந்தாள் ராதாலட்சுமி.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது.' என்று பெரியவர்கள் கூறுவார்கள். நாமாக எமது திருமணத்தை நிச்சயம் செய்ய முடியாது ராதா! என்று கூறினாரே வாசு அது எவ்வளவு பெரிய உண்மை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தாள் ராதாலட்சுமி.

அவள் இதயத்தில் நீக்கமற நிறைந்து நின்ற வாசுதேவனின் எழில் உருவம் ஆறுதல் அளித்ததாயினும் இந்தத் திருமணத்தை தடை செய்வது எப்படி? எனக்கு நிச்சயம் செய்யப்பட்டவனுக்கு என் நிலையைத் தெரிவித்து அவன் மூலமே இதைத் தடை செய்தால் என்ன? இப்படிப் பலவாறான ஞாபகங்களுக்கிடையில் அவள் தத்தழித்த பொழுது கவிதா வந்து அவள் அறைக்குள் நுழைந்தாள்.

'கொன்கிறாஜ்சுலேசன் லட்சு' என்று கூறிக் கொண்டே அவள் முகத்தினைத் திருப்பினாள்.

அவள் நீள்விழிகள் சிவந்து கண்ணீர் கசிந்துகொண்டிருந்தன. அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

அவளுடைய செம்பவழ இதழ்கள் துடித்தன. தமக்கையின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவெனக் கதறினாள் ராதாலட்சுமி. இப்படி ஒரு நிலையை எதிர்பார்த்தே அங்கு வந்தவள் கவிதா அவளுடைய தலையைத் தடவியபடியே, லட்சு! என்னடி? என்ன நடந்தது? அப்பா ஏதோ சந்தோஷமான செய்தி கூறினார். அதைக் கேட்டு உன்னை வாழ்த்துவதற்காக ஓடிவந்தேனே.' என்றாள்.

'அக்கா அக்கா நான்—— நான்——' என்றாளே தவிர அவளால் எதுவும் கூறமுடியவில்லை. விக்கலெடுத்து மேலும் அழ ஆரம்பித்தாள்.

'என்னென்றுதான் கூறேன்டி. சும்மா அழுதால் இதன் பொருள் என்ன?'

'எனக்கு——இந்தத் திருமண ஏற்பாட்டில் விருப்பமில்லை. அண்ணன் எழுதியதாய் அப்பா கூறுகின்றார். நீயும் அத்தானும கண்டிக்கு வந்த பொழுதே நான் சந்தேகப்பட்டேன். நான்—— நான்——'

'நீ யாரையேனும் விரும்புகின்றாயா ராதா?'

'ம்'

'யார் அவர்?'

'அவர் பணத்தால் ஏழை. குணத்தால் அவருக்கு நிகர் யாருமே இல்லை.'

'ராதா! இன்றைய உலகில் பெரும்பாலும் இப்படித்தான் நிகழுகின்றது. அது சரி அவர் எங்கிருக்கின்றார் தெரியுமா? நான் சென்று விசாரிக்கட்டுமா?'

'அவர் கொழும்பில் வேலை பார்க்கின்றார்'

'எந்த டிப்பாட்மென்ட்?'

'தெரியாது.'

'கடிதம் போடுவதில்லையா?'

'இல்லையே——' என்று அழுதாள்.

'நீ பணக்கார வீட்டுப் பெண் என்று தெரிந்து சில நாட்கள் உன்னோடு பழகியிருப்பான். இன்றைய ஆண்களே இப்படித்தான். நடந்ததை மறந்து நடப்பது பற்றி மகிழ்வோடு இருப்பது தான் உனக்கும் நல்லது. அப்பா வேறு 'ஹாட் வீக்' ஆக இருக்கின்றார்.' என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டாள்.

ஃ

வாசுதேவன் வேலை பொறுப்பேற்று ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. ராதாலட்சுமிக்கு அனுப்பிய கடிதத்துக்குப் பதில் ஏதும் வராததினால் அது பற்றி பின்பு எதுவும் அவளுக்கு எழுதவில்லை. சித்திராவுக்குக் கல்யாணம் முற்றாகிவிட்டதாக அவள் எழுதியிருந்தாள் ஒருபுறம் மகிழ்ச்சி! ஒருபுறம் வேதனை! இன்னொரு புறம் சோதனை! அவன் வாழ்வில் நிம்மதி என்ற ஒன்று என்றைக்கும் வராதா என்னும் அளவுக்கு உள்ளம் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

ராதாலட்சுமிக்கும் சுரேஷ் குமாருக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டது. எப்படியும் அவளை அடைந்தே தீர வேண்டும் என்பதில் வெற்றி கிட்டிவிட்டதாகச் சுரேஷ் குமார் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்த கடிதம் வந்தது. ஒரு முறைக்குப் பலமுறை படித்தான். அதற்கு என்ன பதில் எழுதுவதென்றோ முடிவு கூறுவதென்றோ அவனால் நிர்மாணித்துக் கொள்ள முடியவில்லை.

இதுவரை காலம் பல இளம் பெண்களோடு பழகியிருக்கின்றான். வெள்ளைக்காரப் பெண்கள் கூட அவனோடு கூடிக்குலாவியிருக்கின்றனர். ஆனால் ராதாவை நினைக்கும் பொழுது அவன் உள்ளத்தில் இதுவரை இல்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாது
# வி. பொன்னம்பலத்துக்கு ஒரு பகிரங்க சவால்!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பேசி வருகிறார் வி. பொன்னம்பலம்! அதுமட்டுமல்ல—தமிழரசுக்கட்சி தன் கடந்த காலத் தவறுகளை ஒப்புக்கொள்வதோடு — தனிநாடு சமஷ்டி கோரிக்கைகளை அவர்கள் கைவிடுவார்கள் என்றால் கம்யூனிஸ்ட் கட்சி எம். பீக்கள் மூலம் தேசிய அரசப்பேரவையில் இதற்கான சட்ட மூலம் ஒன்றினைக்கொண்டுவரத்தாம் நடவடிக்கை யெடுப்பதாகவும் கூறியிருக்கிறார் வி பொன்னம்பலம்-ஏதோ தாம்தான் ஆட்சிச் சக்கரத்தையே கையில் வைத்துக்கொண்டிருக்கும் நினைப்பில்!

ஒரு கன்னிப் பெண்ணைப்பார்த்து முதலில் நீ உனது கற்பை எனக்கு காணிக்கையாக்கு; அதன்பின் உனக்கு மாப்பிள்ளை பேசிப்பார்க்கிறேன் என்று கூறுவது போல இருக்கிறது வி. பொன்னம்பலத்தின் இந்தக் கூற்று!

இன்றைக்கு பிரதேச சுயாட்சி பற்றிப்பெரிதாகப் பேசிவரும் வி பொன்னம்பலம் (அவர் மட்டுமே பேசுகிறார்—அவரது கட்சியினர் — குறிப்பாகச்சிங்களச் தோழர்கள் பேசுவதில்லை) 1968ம் ஆண்டு, தமிழ் பிரதேசங்களுக்கு ஓரளவு சுயாட்சி வழங்கும் மாவட்ட சபைகளை நிறுவ முயற்சியெடுக்கப்பட்ட போது ஏன் அதை எதிர்த்தார்? அவரது செஞ்சட்டை தோழர்கள், சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்துகொண்டு மாவட்ட சபை நாட்டைப் பிரித்துவிடும் என்று பிரச்சாரம் செய்தும், தோசைவடை நல்லெண்ணை கோஷம் எழுப்பியும் தமிழர்களுக்குமாவட்ட சுயாட்சி கிடைக்காமல் ஏன் தடுத்தார்கள்?

அதுதான் போகட்டும் — யூ. என். பி. அரசாங்கத்தை வீழ்த்தவேண்டும் என்ற அரசியல் காரணத்துக்காக அப்படி நடந்தார்கள் என்று சமாதானம் கூறினாலும் — 1970-ம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிந்து ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது-அந்த ஆட்சியில் தாமும் ஒரு அங்கமாக இணைந்த கம்யூனிஸ்ட்கட்சி, தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை—பிரதேச சுயாட்சியை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அரசாங்கத்துடன் சேர்ந்ததா? கிடையாது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் 'பௌத்த சிங்கள' கொள்கைக்கு கட்டுப்பட்டே அரசாங்கத்துடன் சேர்ந்தது—தமிழர்களை காட்டிக் கொடுத்தது!

அதுதான் போகட்டும் — புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபை கூடிய போது — அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்து வந்த கம்யூனிஸ்ட் கட்சி, அரசாங்கத்தை வற்புறுத்தி பிரதேச சுயாட்சியையும், தனது ஐந்து அம்சத்திட்டத்திலுள்ள ஏனைய அம்சங்களையும் புதிய அரசியல் சட்டத்தில் சேர்த்திருந்திருக்கலாமே! ஏன் அப்போது எங்கே இவர்கள் போனார்கள்? இப்போது பிரதேசசுயாட்சி' என்று கூறியாரை ஏமாற்ற நினைக்கிறார்கள்?

இவர்களது ஐந்து அம்சத்திட்டத்தில் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட அம்சங்கள் மூன்றே மூன்றுதான்! முதலாவது அம்சமான ஒற்றையாட்சி அமைப்பும், இரண்டாவது அம்சமான சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோகமொழியென்பதும், தமிழனை இந்நாட்டில் நிரந்தர அடிமையாக்கி, ஆளப்படும் இனமாக்கி, அழித்தொழிக்க வழி வகுத்திடும் திட்டங்கள்! மூன்றாவது அம்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி தமிழாக இருந்திடவேண்டுமென்பது.

புதிய அரசியல் சட்டத்தில், தங்கள் முதலிரு திட்டமான—தமிழனுக்கு விரோதமான-சிங்களம் மட்டும் சட்டமும் ஒற்றையாட்சி அரசியலமைப்பும் இடம் பெறுவதற்கு பூரண ஆதரவளித்த கம்யூனிஸ்டுகள், தமதுமூன்றாவது திட்டமான வடக்குகிழக்கில் தமிழை 'நிர்வாக மொழி'யாக்க வழி வகுத்திடும் 1966ம் ஆண்டின் தமிழ் மொழிச்சட்ட விதிகளை எதிர்த்து தங்கள் தொழிற்சங்கங்களை ஏவிவிட்டு வகுப்புவாத அடிப்படையில் வேலைநிறுத்தம்செய்வித்ததும், தோசை வடை ஊர்வலம் போனதும் மட்டுமல்ல—தமிழை நிர்வாக மொழியாக்கும் சட்டவிதிகளை எதிர்த்து ஊர்வலம் போய் சூடுபட்டிறந்த பௌத்த பிக்குவுக்கு நினைவுச் சின்னம் நிறுவியதுமட்டுமல்ல — இந்தச்சட்டவிதிகளுக்கு அரசியல் சட்ட அந்தஸ்து வழங்காத புதிய அரசியல் சட்டத்தை இவர்களும் சேர்ந்தே கொண்டுவந்திருக்கிறார்கள்! இவர்களும் சேர்ந்திருக்கும் அரசாங்கம் தான் அச்சட்டவிதிகளை அமுல்படுத்த மாட்டோம் என்று ஒன்றிரண்டல்ல — பல தடவைகளில் அறிவித்தும் இருக்கிறது!

'நிர்வாக மொழி' நாடகம் இப்படியென்றால், போதனாமொழிப்பிரச்சினையில் தாய்மொழியேபோதனாமொழியாகஇருக்கவேண்டுமென்று இவர்களது நான்காவது அம்சம் கூறுகிறது. ஆனால் இதே அம்சத்தை வலியுறுத்தி,

## அரசியல் மடல்

தாய் மொழி கட்டாய போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று தமிழரசுக்கட்சியினர் அ. நி. சபையில் கொண்டு வந்திருந்த தீர்மானத்தை எதிர்த்தவர்கள் இந்தக்கம்யூனிஸ்டுகள்தாம்!

தாய்மொழியே ஒரு குழந்தையின் போதனா மொழியாக இருக்கவேண்டு மென்ற அடிப்படை உரிமையை குழிதோண்டிப் புதைத்துவிட்டு புத்தூரில் தமிழ் குழந்தைகளின் தொண்டைக்குள் அவர்களின் தாய்மொழியல்லாத வேற்றுமொழியான சிங்களத்தை பலவந்த போதனாமொழியாக திணிப்பதும், இதே கம்யூனிஸ்டுகள் அங்கம் வகித்திடும் இன்றைய அரசுதான்! இதை எதிர்த்து இதுவரை இவர்கள் சுண்டு விரலைக் கூட தூக்கியது கிடையாது!

இவர்கள் தாம் தமிழ் மக்களை ஒன்றும் புரியாத மூடர்கள் என்று எண்ணிக்கொண்டு ஐந்து அம்சச்சித்து விளையாட்டு காட்டி காங்கேசன்துறை இடைத்தேர்தலை ஒப்பேற்றி விடலாமென்று கனவு காண்கிறார்கள்!

நாம் வி. பொன்னம்பலத்துக்கு சவால் விடுகிறோம்—தமிழர் கூட்டணியின் கோரிக்கைகள் ஒரு புறம் இருக்கட்டும்—தமிழர் கூட்டணியை தமிழ்மக்கள் ஆதரிக்கவில்லையென்று நீங்கள்கூறிக்கொள்ளுகிறீர்கள்—தமிழ் மக்கள் அரசாங்கக்கட்சிகளின் பின்னால் அணிதிரண்டு விட்டதாகவும் அறிக்கை விடுகிறீர்கள்—இவை உண்மையானால் உங்களை—அதாவது அரசாங்கக் கட்சிகளை பின்பற்றுகின்ற தமிழ் மக்களின் உரிமைகள் கிடைப்பதற்காக, உங்கள் கம்யூனிஸ்டு கட்சிமூலம், அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறி நீங்கள் கூறும் பிரதேச சுயாட்சியை வழங்க நடவடிக்கையெடுக்கலாமே...!

தமிழ் மக்களின் உரிமைகளை இந்த அரசாங்கம் வழங்கி விட்டதென்றால், தமிழ் மக்களை திருப்திப்படுத்திவிட்டதென்றால்—தமிழர் கூட்டணியை தமிழ் மக்கள் தாமாகவே நிராகரித்து விடுவார்களே...! உங்களால் முடியுமா உங்களுக்கு திராணி, தெம்பு — செல்வாக்கு உண்டா இதைச் செய்வதற்கு?

நண்பா, நான் முதலில் சொன்னபடிதமிழ் மக்களிடையே மூண்டெழுந்துள்ளஇனவிடுதலை உணர்ச்சிக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாமற்தான் வி பொன்னம்பலம் 'பிரதேசசுயாட்சி' பற்றி இப்போது பிதற்றத்தொடங்கியிருக்கிறாரே தவிர வேறல்ல! இந்த உணர்ச்சியை தட்டியெழுப்பிவைத்திருப்பது தமிழர் கூட்டணியே! இதை யாரும் மறக்க முடியாது.

தமிழர் கூட்டணி தமிழ் ஈழ சுயாட்சி (அவர்கள் பாஷையில் தனிநாடு) கோருவதாக இருந்தால் தமிழர் கூட்டணி பா. உ.க்கள் அனைவரும் பதவி விலகி மறுதேர்தலுக்கு நிற்க வேண்டுமாம்—இதுவும் யாழ் மாநகர சபைத் தேர்தலைச் சந்திக்க அஞ்சும் துரையப்பாவும், வி. பொன்னம்பலமும், மற்றும் ஆளுங்கட்சி அடிமைகளும் விடுத்திருக்கும் 'கட்டளை!

காங்கேசன் துறை இடைத்தேர்தலையே நடத்தாது— கடந்த ஒன்பது மாதங்களாக காங்கேசன்துறை தொகுதி மக்களின் அடிப்படை உரிமைகளையே வழங்க மறுத்து வரும் இன்றைய அரசாங்கமா எல்லாத் தமிழ்த் தொகுதிகளிலும் தேர்தலை நடத்தப் போகிறது? இதையே சாட்டாக வைத்து தமிழ் மக்களின் பாராளுமன்ற உறுப்புரிமைகளையே பறித்து விடத்திட்டம் தீட்டுகிறார்கள் இவர்கள்!

தமிழர் கூட்டணி பா. உ.க்கள் எதற்காக பதவி விலகவேண்டும்? அப்படிப் பதவி விலக வேண்டுமானால், தமிழ் காங்கிரஸ் சார்பில் 'சம அந்தஸ்து' கொள்கையை முன் வைத்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்று தனிச்சிங்கள தாசர்களாகிவிட்ட அருளம்பலமும் தியாகராசாவும் முதலில் ராஜினாமா செய்யவேண்டும்! தமிழரசுக்கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்று பின் முதுகில் குத்திய மாட்டின்துரை ராஜினாமா செய்யவேண்டும்! யூ. என். பி.யின் துணையுடன் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்று சமசமாஜக் கட்சிக்குத்தாவி, அங்கிருந்து சுதந்திரக் கட்சிக்கு தாவிய பச்சோந்தி அரசியல்வாதி பீ.ஆர். செல்வநாயகம் ராஜினாமா செய்யவேண்டும்!

இவையெல்லாம் ஏன்? விலைவாசியைக் குறைப்போம்—வாழ்க்கைச்செலவைக் குறைப்போம்—இரண்டு கொத்து அரிசி தருவோம்—என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்து ஆட்சியைப் பிடித்து அதிலேறி உட்கார்ந்துகொண்டு இன்று விலைவாசியை உயர்த்தி, மக்களை வாட்டி வதைக்கும் இன்றைய அரசு பதவி விலகவேண்டும்! ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி நடத்திட அதிகாரம் பெற்றுவிட்டு, மேலும் இரண்டாண்டுகள் அதிகமாக பதவியிலிருக்க காலத்தை நீட்டிக்கொண்ட ஆட்சிபீடமே பதவி விலக வேண்டும்!

எனவே நண்பா ஒரு சில அடிமைத் தமிழர்களின் விதண்டா வாதக் கூக்குரல்களால் விடுதலை பெற்றே தீருவது என்று முடிவு செய்துவிட்ட தமிழினத்தை இனியும் தடுத்துநிறுத்த முடியாது! நாம் நமது இலட்சியப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்! சலசலப்புகளுக்கு அஞ்சுபவர்கள் நாமல்ல — ஏனெனில் நாம் பனங்காட்டு நரிகள்!

உன் அன்புத் தோழன்.

கோவை-மகேசன்

---

## தேர்தல்...

(1.ம் பக்கத் தொடர்ச்சி)

கிய என்னை எலி என்ற அடைமொழியோடு குறிப்பிடுவது அநீதியாகும். என்னைப் பழிப்பதுமாகும்.

தங்கள்கீழ் இயங்கும் ஊழியரன்றோ இப்பிழையைவிட்டவர்கள்! இதனால் தங்கள் நிர்வாகத்திற்கன்றோ இழுக்கு? சிங்கள மக்களுடைய பெயர்களில் இது போன்ற பிழைகள் ஏற்பட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? தமிழ்ப் பெயர்கள் மட்டும் இந்நிலைக்காளாவதேனோ? இன்று ஆட்சியில் இருப்பது மக்கள் அரசன்றோ? மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்திற்கு இழுக்கு உண்டாகும்வகையில் நடப்பது மக்களை அவமதிப்பதாகாதோ? மனிதனை எ. லியவன் என்றும், எலி, என்றும் அழைப்பது நீதியாகுமா?

## ஈழவேந்தன் பேசுகிறார்

இலங்கைப் பல்கலைக் கழகத்திலுள்ள புதிய கலை மண்டபத்தில் 30-6-73ல் நடைபெறும் இந்து மன்றக் கலை விழாவில் 'சிந்தனை செய் தமிழா' எனும் தலைப்பின் ஈழவேந்தன் பேசுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் விருந்து

"பேச்சைவிடப் பெரியது பணிவிடை"

—— தர்மசக்கரம்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

## தமிழக...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஏற்கனவே தமிழ் நாட்டில் இருந்து வரும் பத்திரிகைகளை தடை செய்தும் — இறக்குமதியை குறைத்தும் இருக்கிறது இந்த சிங்கள பௌத்த வெறி பிடித்த அரசு என்று தமிழ் மக்கள் மிகவும் நொந்து போய் இருக்கிறார்கள். இப்படியான இந்த சந்தர்ப்பத்தில் — வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் — பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல் கருணதிலகா என்ற சிங்களவர் தலைமையில் இயங்கும் ஒரு கமிட்டி வெளியிட்ட அறிக்கையை வைத்துக் கொண்டு சன் கூச்சல் போடுவது — சத்தம் போடுவது — வகுப்பு துவேஷத்தை தூண்டுவது அழகுமல்ல — முறையுமல்ல.

தமிழ் நாடு, தமிழர்கள், தமிழ் புத்தகங்கள் என்றால் இந்த நிறுவனத்துக்கு எப்பொழுதுமே கசப்புத்தான். இது எல்லோருக்கும் தெரியும். இப்படியான இந்த இடத்தில்தான் மானம் — ரோசம் அற்ற ஒரு சோற்றுப் பிண்டமும் வேலை செய்கிறது.

தமிழ் பத்திரிகைகளில் ஒரு கருத்து, சிங்கள பத்திரிகைகளில் இன்னுமொரு கருத்து, ஆங்கிலப் பத்திரிகைகளில் வேறொரு கருத்து — இப்படியாக அந்த குணசேன நிறுவனம் வெளியிடும் பத்திரிகைகள் எல்லாமே நாடகம் ஆடி வருகின்றன. இவை எல்லாம் எத்தனை நாளைக்கு? இதற்கெல்லாம் ஒரு முடிவு காலம் விரைவில் வரத்தான் போகிறது. அந்த பொற்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து பத்திரிகைகள் மட்டுமல்ல — எங்களுக்கு தேவையான எல்லாமே வரத்தான் போகிறது.

— வி. ஆர். லிங்கம்
இணுவில்


---

## ராதையின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லாத ஒரு தாபம், ஆர்வம் தோன்றுகின்றதே அதற்குக் காரணம்——? அவனுக்குப் புரியவில்லை. அவளுடைய வாளிப்பான உடலும், கவர்ச்சிகரமான தோற்றமும் பார்ப்பவர் மனதைத் தன்பால் இழுக்கும் ஒருவித மாரீசக் கவர்ச்சியும் அவளிடம் இருந்தது மட்டுமன்றி அதற்கேற்ற அலட்சிய மனோபாவமுமே அவனை அவள்பால் நினைவுகூரச் செய்துகொண்டிருந்தது. இதுவரை நாளும் புரியாத அந்தப் புதிருக்கு அக் கடிதம் விடை பகர்ந்து விட்டது.

'ராதா! நான் இதுவரை நினைத்ததை அடையாமல் விட்டதில்லை. நான் மனச்சாட்சிக்கு மதிப்பளித்து வாழ்வதாயிருந்தால் இந்நிலைக்கு உயர்ந்திருக்க முடியாது. நீ எப்படிப்பட்டவளாக இருப்பினும் பரவாயில்லை. போட்டியில் ஒரு பொருளை அடைவது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.' என்று தனக்குத்தானே கூறிவிட்டு மீண்டும் கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.




# தமிழர் கூட்டணி அரசுக்குப் பேரிடி!

## ஈழத்து அரசியல் நிலை குறித்து 'நியூயார்க் டைம்ஸ்' விமர்சனம்!

"காடுகளை வெட்டித் திருத்தி, தேயிலை, கோப்பி தோட்டங்களில் வேலைசெய்வதற்காக அவர்கள் (மலையகத் தமிழர்கள்) 19ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்தனர்.

''இந்த நாட்டை செல்வச் செழிப்புள்ள நாடாக மாற்றியமைத்தது நாமே''— என்று ஏறத்தாழ நான்கு இலட்சம் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திவாய்ந்த தொழிற் சங்கமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் கூறினார்.

''தோட்டத் தொழிலாளர்களே ரோட்டுக்களையும், புகையிரதப் பாதைகளையும் அமைத்து போக்குவரவுத் தொடர்புகளை ஏற்படுத்தி வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தை வளர்ப்பதற்கு முதுகெலும்பாக இருந்தார்கள். இந்நாட்டை செழிப்புள்ளதாக்கியது எமது மக்களின் இரத்தமும் வியர்வையுமே. ஆனால் இன்று நாங்கள் கசப்பான பிரதியுபகாரத்தை பெறுகிறோம்'' என்று அவர் மேலும் கூறினார்.

''இலங்கையில் இப்போது பத்தேகால் இலட்சம் இந்திய தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களது கோபம், அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் சோசலிச— அரசாங்கத்துக்கு மேலும் பீதியை யூட்டியுள்ளது.

''தமிழர்கள் தாங்கள் இரண்டாந்தர நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். சிங்களம் மட்டுமே அரசாங்க மொழி எனும் சட்டத்தினால், தாங்கள் வேலைவாய்ப்பை இழந்து வருவதாகவும், பாரபட்சம் காட்டப்படுவதாகவும் கூறுகிறார்கள். தோட்டப்பகுதி வாலிபர்களிடையே வேலையற்ற பிரச்சினை பயங்கரமாக உருவெடுத்துள்ளது.

''சனத்தொகையில் 25 வீதமானோர் தமிழைப் பேசுவோராக இருக்கும் நம்நாட்டில் ஒருமொழியை மட்டுமே திணிக்கும் கருத்தை நாம் சம்பூரணமாக நிராகரிக்கிறோம்'' —என்று தமிழ்த் தலைவரும் முன்னாள் அமைச்சருமான முருகேசு திருச்செல்வம் கூறினார்.

''தமிழர்கள் தங்கள் மொழி, கலாசார சூழலிலேயே தாம் வாழவேண்டும் என்று கோருகிறார்கள்—சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக இருந்தால் தங்கள் பாரம்பரியம் அழிந்துவிடும் என்று அவர்கள் அச்சமடைகிறார்கள்'' — என்றும் திருச்செல்வம் தெரிவித்தார்.

''சிங்களம், தங்கள் மொழி, மத தனித் தன்மைகளை அழித்தொழித்து தம்மை மூழ்கடித்துவிடும் என்று தமிழர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

தமிழர்கள் மிகுந்த தீவிரவாதிகள், இலங்கையில் ஒரு ''தமிழ் பங்களாதேஷ்'' உருவாக்கப்படவேண்டும் அல்லது இந்தியாவுடன் தொடர்புடைய சுதந்திர தமிழ்நாடு வேண்டுமென்று கோருகின்றனர்.

''இந்திய இரத்தம் ஓடும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட மனிதப் பிரச்சினைதான் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. பல தலைமுறைகளாக ஈழத்தில் வாழ்ந்து வருபவர்கள் இவர்கள். வறுமைமிக்க பென்னம்பெரிய நாடான இந்தியாவுக்கு-தங்களுக்கு அந்நிய நாடாகிய இந்தியாவுக்கு — செல்வதற்கு இந்த தொழிலாளர்கள், முன்வருகிறார்களில்லை.

தமிழர்கள் பெருவாரியாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 'சொரில்லா' பயிற்சிகள் இடம்பெற்றுவருதாகவும், தமிழ்ப் 'பயங்கரவாதிகள்' ஆயுதப்பயிற்சி சம்பந்தமாகவும் வரும் வதந்திகள் இந்தப் பிரச்சினையின் ஆழத்தை சுட்டிக் காட்டுகின்றன.

''இலங்கையின் இரகசிய பொலிஸ் பகுதியோ, சில முக்கிய மனிதர்களை இல்லாமற் செய்யவும், தமிழ்ப்பகுதியில் உள்ள பொது இடங்களை நாசப்படுத்தவும் போடப்பட்ட திட்டங்களை தாம் கண்டுபிடித்துவிட்டதாக கூறியிருக்கிறது.

"ஒன்றுக்கொன்று போட்டிக் கட்சிகளாக இருந்துவந்த தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும், சிறுபான்மை இனத்தின் உரிமைகளை மீட்பதற்கு தமிழர்கூட்டணி எனும் அமைப்பின் கீழ் இன்று ஒன்றுபட்டிருப்பது அரசாங்கத்துக்கு மிகுந்த கவலையை கொடுக்கிறது.

''தமிழர் கூட்டணி பல தலைமுறைகளாக இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே அமைப்பாக விளங்குகிறது.

''அரசியல் சட்டத்தின் மூலம் தமிழுக்கு ஆட்சிமொழி அந்தஸ்து, உத்தியோகத்துறையில் பாரபட்சமின்மை, திறமை அடிப்படையில் உயர்கல்வி, இலங்கையில் வாழவிரும்பும் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை-இவற்றையே இவர்கள் கோருகிறார்கள்.''

—இவ்வாறு பிரபல அமெரிக்க ஏடான 'நியூயார்க் டைம்ஸ்' இலங்கை அரசியல் பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கட்டுரையை 'ஸ்ரெயிட் ரைம்ஸ் சிங்கப்பூர்' என்ற சிங்கப்பூர் ஏடு மறு பிரசுரம் செய்துள்ளது.

---

## கம்யூனிஸ்டுகளின் கபட உள்ளம் காண்பீர்

''சிங்கள மொழியை அரசகரும மொழியாக ஏற்கின்ற அதே நேரம் தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாக அமைவதோடு அவர்கள் தங்கள் விவகாரங்களைத் தாமே நடத்தும் வகையில் சுயாட்சியமைப் பொன்றையும் உருவாக்குவதே ஐந்து அம்சத்திட்டத்தின் முக்கிய நோக்கம்''—அ. வைத்திலிங்கம்.

—சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்துப் பெற்றிட நெஞ்சுத் துணிவு அற்றவர்கள், தமிழ் மக்கள் மேல் சிங்களத்தைத் திணிக்கத் துடி துடிக்கிறார்கள்.

அன்று மாவட்ட சபை மசோதாக்களை எதிர்த்தவர்கள் இன்று சுயாட்சிக்காகப் பாடுபடுகிறார்கள். இன்று சுயாட்சி என்பவர்கள் நாளை ''சுயாட்சி நாட்டைத் துண்டு போட்டிட வழிவகுக்கும். எனவே சுயாட்சி தமிழருக்கு ஆகாது'' என்று கூறுவார்கள்.

அன்று அ. அ. நி. சபையில் தமிழரசார் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணைகளை இவர்கள் ஆதரித்திருப்பின், இன்று இந்தக் கம்யூனிஸ்டுகள் இவ்வளவாகப் ''பாடுபடத்'' தேவை ஏற்பட்டிருக்காதே.

அன்று அரசியலமைப்பிற்கான திருத்தப் பிரேரணைகளை மூர்க்கத்தனமாக எதிர்த்துவிட்டு இன்று 5 அம்சத்திட்டம் தீட்டுகிறார்கள், தீர்க்கதரிசனமற்றவர்கள்.

வடக்குக் கிழக்கில் ''இவர்களது சுயாட்சியில்'' தமிழ் நிர்வாக மொழியாகிடின், சிங்களம் இந்த இரு மாகாணங்களில் அரசகரும மொழியாகிட இடமில்லை. சிங்களம் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளவேண்டிய தொடர்பு மொழியாகவே அமைதல் வேண்டும்.

சிங்கள இனம், தமிழ் இனத்தை விழுங்கி ஏப்பமிட வேண்டும் என்பதே இந்தக் கம்யூனிஸ்டுகளின் பேரவா போலும்.

தமிழா, இந்தப்போலிக் கம்யூனிஸ்டுகளின் நயவஞ்சக வலையினுள் தப்பித் தவறியும் வீழ்ந்திடாதே!

—''கடுகு''

---

## திருக்கோணமலை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இவ்வண்ணம் குறுகிய மத நடவடிக்கை எடுத்ததன் மூலம் திருக்கோணமலை மக்களின் நல்லெண்ணத்தை இழந்துவிட்டார் ஆணையாளர்.

திருக்கோணமலை மக்களுக்குச் செய்யவேண்டிய செயல்களில் அவர் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை; செய்யவேண்டிய கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் செய்வதாகத் தெரியவில்லை. அலுவலகத்தில் இல்லாமல் கொழும்பில் அல்லது வெளியூரில் தங்குவது இதற்குச் சான்றாகும். சில நாட்களில் ஆணையாளர், செயலாளர், கணக்காளர் மூவரும் விடுமுறையில் சென்றுள்ளார்கள். இவ்வண்ணமான நிலை நீடித்தால் நீங்கள் நகர சபையைக் கலைத்த நோக்கம் நிறைவேறப் பல ஆண்டுகள் ஆகலாம், அல்லவா?

ஒரு ஆணையாளரின் பிற்போக்கான மேற்படி நடவடிக்கைகளால் நமது நகர் பின்தங்கி அடிமைப்பட்டிருப்பது தர்மம் ஆகாது. தயவுசெய்து தாங்கள் ஒரு பிரதிநிதியை திருக்கோணமலைக்கு அனுப்பி ஆணையாளர் திருக்கோணமலையில் தங்கி அலுவலகத்திற்கு சென்ற நாட்கள் அவர் ஆற்றிய சேவைகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கவும்.

எமக்கு வேண்டியது நகரின் துரித முன்னேற்றமே யாகும்.

---

## அமெரிக்கா...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் தமிழ் அரசுக் கட்சியை வளர்த்து வலுப்பெறச் செய்வதுடன் ஒன்றுபட்ட சமதர்ம தமிழ் சமுதாயத்தைக் கண்டு தமிழரசு நிறுவ, தமிழ் மக்களின் பரிபூரண ஆதரவுடன் அவர் தலைமைப் பதவியை ஏற்று தமிழ் இனத்தை தந்தை செல்வா, அமரர்கள் வன்னியசிங்கம், இராஜவரோதயம், நாகநாதன் ஆகியோர்களின் தன்னலமற்ற தியாக இலட்சிய வழியில் நடத்திச் செல்ல எல்லாம் வல்ல இறைவன் ஆசி நீர் என்னும் மாரி பொழிந்து அருள்புரிவாராக.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**388-வது நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மூளைக்கோளாறு'டன் தான் சமசமாஜிகளை டாக்டர் என். எம். அன்று வழி நடத்தினரா?

## இன்றைய குத்துக் கரணத்தை இதோ அம்பலப்படுத்துகிறது 1956-ம் ஆண்டுப் பிரசுரம்!

**மலைவாணன்**

இன்றைய இலங்கையை ஒரு பரிபூரண சுதந்திரம் பெற்றுள்ள நாடாக தாங்கள் பிரகடனம் செய்து விட்டதாகப் பெருமையடைகிறார்கள் இன்று ஆட்சியாளர்கள். ஆனால் ஆண்டாண்டுக் காலமாக இந்நாட்டு மக்கள் அடைந்து வந்த சுதந்திரம் அணுவணுவாக அல்லாது முழுவதுமாகப் பறிபோய்க்கொண்டிருப்பதை எவரும் நன்கறிவர். இல்லை! அடிவருடிகளும் நடிப்புச் சுதேசிகளும் அறியார்.

அன்று சமசமாஜிகள் எவ்விதமான ஒரு சுதந்திரத்தை இந் நாட்டில் எதிர்பார்த்தார்களோ அதே சுதந்திரத்தையே இந் நாட்டில் எல்லோரும் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து விட்டார்கள், அன்று சமசமாஜிகள் எவற்றையெல்லாம் ஒரு பரிபூரண சுதந்திரத்தை பெற்ற நாட்டில் எதிர்பார்ப்பதாகக் கூறினார்களோ அவற்றையே இன்று இந் நாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இந் நிலையில் இந் நாட்டிலுள்ள எல்லோரையும் பைத்தியங்களாகத் தாம் கருதுவதாக நிதியமைச்சர் திரு என்.எம். கூறுவாரானால் அதை விட பைத்தியக்காரத்தனம் இருக்கமுடியாது.

இதோ! 'வாழ்க்கைச் செலவு உயர்வு' எனும் தலைப்பில் நிதியமைச்சர் திரு. என். எம். பெரேரா அவர்கள் கொழும்பு தேயிலைப்பிரசார சபை மண்டபத்தில் பேசியதாக 17—2—73ல் வெளிவந்த தினகரன் செய்தியில் ஒரு முக்கிய பகுதி.

"இன்றைய சூழ்நிலையில், இங்குள்ள எவரும் விலைவாசியைக் குறைக்க முடியுமெனக் கூறினால் ஒன்றில் அவர் மூளைக் கோளாறு உடையவராயிருக்க வேண்டும், அல்லது மக்களை ஏமாற்றுபவராய் இருக்க வேண்டும்." — என். எம்.

இதை வாசித்துவிட்டு, சமசமாஜிகள் அன்று சுதந்திரத்திற்கு வரைவிலக்கணம் கூறி வெளியிட்ட ஒரு ஆண்டுப்பிரசுரத்தை ஞாபகத்திற்குக் கொண்டு வந்த எனக்கு விளங்குவதென்னவோ திரு. என். எம். பெரேரா முன்பு மூளைக்கோளாறு உடையவராய் இருந்து கொண்டு தான் சமசமாஜிகளை வழி நடத்தியிருக்கிறார் என்பதே.

இதோ! உங்கள் கவனத்திற்கு. "இலங்கைச்சுதந்திரத்தின் அடையாளங்கள், இது ஓர் சுதந்திரமா" என்ற தலைப்புடன் 3. 2. 56ல் சமசமாஜிகள் பிரசுரித்த ஒரு துண்டு பிரசுரத்தை அப்படியே இங்கு தருகிறேன். வாசித்துப்பார்த்து உங்கள் தீர்ப்பைக் கூறுங்கள்.

"இலங்கைச் சுதந்திரத்தின் அடையாளங்கள். இது ஓர் சுதந்திரமா?

முறைக்கு முறை ஏழைகளின் ..ண்களில் மண்ணைத் தூவித் தேர்தலின் போது மக்களை ஏமாற்றி பதவி ஏற்கும் யூ. என். பி. காரர்கள் சுதந்திர தினமென்று கூடிக் கும்மாளம் அடிக்கும் போது இலங்கை வாழ் ஏழைகளை நினைக்கிறார்களா? அல்லது தேசமக்களுக்கு ஏதும் சந்தோஷமுண்டா?

* இந்த சுதந்திரத்தின் கீழ் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க வீடின்றி ஏழைகளுக்கு கிடைத்த சுதந்திரம்!
* அரிசி, தேங்காய், சீனி, காய்கறி விலை கூடச் செய்து, ஜீவியச் செலவிற்காக மக்களை நசுக்கப் பார்க்கும் சுதந்திரம்!
* பள்ளிப் பிள்ளைகளின் வயது கூடி விட்டது என்று கல்வியை கட்டுப்படுத்தும் நாகரீக சுதந்திரம்!
* தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து, நடுவீதியில் பசியோடு நிற்கச்செய்யும் சுதந்திரம்!
* ரயில்வே, தபால் முதலிய கட்டடங்களைக் கூட்டி பஸ்வண்டிகளுக்காக குடும்பத்தோடு நடுரோட்டில் காத்திருக்கச் செய்யும் சுதந்திரம்!
* ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்கிடமின்றி, படுக்கை காலடிகளில் நிலத்தில் மருந்தின்றி, சிகிட்சையின்றி நிலத்தில் படுத்துச் சாகும் சுதந்திரம்!
* அரசாங்க அட்டூழியங்கள் ஏழைகளை பயமுறுத்தி, பணம் பறித்து மோசம் போக்கும் சுதந்திரம்!
* ஏழைகளின் வரிப் பணத்தை நகர சபைகளில் ஊதாரித்தனமாக செலவுசெய்ய இடங் கொடுக்கும் சுதந்திரம்!
* வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் இவ்வேளையில் அநியாயமாக வேலையிலிருப்பவர்களையும் வேலை நீக்கும் சுதந்திரம்!
* ஜாதிபேதம் உண்டாக்கி பாஷைப்பிரச்சினையை தூண்டிவிட்டு சிறுபான்மையோரின் உரிமைகளை அவமதித்து சுயநலத்தை சொந்தமாக்கும் சுதந்திரம்!
* ஏழை விவசாயிகள் சிறு வியாபாரிகள் தொழிலாளிகள் யாவருக்கும் ஆசை காட்டி பாட்டாளி மக்களின் உதிரத்தை உறிஞ்சிக் குடித்து ஏழைகளின் பணத்தைக் கொண்டு உல்லாச ஜீவியத்தால் ஏமாற்றி அரசாங்க பதவிதேடும் சுதந்திரம்!

பாட்டாளி மக்களே உங்கள் உரிமைகளை பெற்றுக் கொள்ள, உங்கள் அந்தஸ்தை பாதுகாக்க முன் வாருங்கள்.

பணமுட்டைகளுக்குச் சுதந்திரமா? அல்லது பாட்டாளி மக்களுக்கு சுதந்திரமா? யூ. என். பி. காரர்களையும், பொய் வேஷக்காரர்களையும் கண்டு ஏமாறுதீர்கள், உங்கள் பின் சந்ததி யாரை காட்டிக்கொடாதபடி கவனமாயிருங்கள்.

இலங்கை
சமசமாஜ கட்சி
நாவலப்பிட்டி — அட்டன் கிளைகள்.
48, தொலஸ்பாகை ரோட்,
நாவலப்பிட்டி,
3-2-56

பார்த்தீர்களா? இப்படி அன்று இவர்கள் கூறும் போது மூளையுள்ளவர்கள். அதையே இன்று மக்கள் கூறும் போது மூளைக் கோளாறு உள்ளவர்கள்!

அன்று இவர்களின் கண்களுக்கு தெரிந்த சுதந்திரம் வேறு இன்று இவர்கள் கண்களுக்குத் தெரியும் சுதந்திரம் வேறு. 'அன்று நாம் இப்படி சுதந்திரத்திற்கு வரைவிலக்கணம் கூறினோமா?' என்று மூளைக்கோளாறு இல்லாத இவர்கள் சிந்திக்கலாம். ஆனால் ஏமாற்றுப் பேர் வழிகளின் ஒவ்வொரு வார்த்தையையும் எழுத்தையும் பதிவு செய்யும் அவசியமிக்க கோளாறுள்ள மூளைகளும் இந்நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன என்பதை உணர்ந்தால்போதும்.

எந்தஒருநாடும் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். காரணம் விளங்காத நிலையில் மக்கள் கொதித்தெழுவதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இந் நிலையில் காரணத்தை விளக்குவதைத் தவிர்த்து மக்களை அவமதிப்பது கண்டிக்கப்படவேண்டிய அநாகரீக அரசியலாகும்.

## தமிழக ஏடுகளுக்கு எதிராக குணசேன பத்திரிகைகள் கூக்குரலெழுப்புவது ஏன்?

16-6-73 அன்று வெளிவந்த சன் (Sun) என்னும் ஆங்கில தினசரி பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தமிழகத்தில் இருந்து இங்கு மாதந்தோறும் இறக்குமதியாகும் 78,000 தமிழ் புத்தகங்கள், சஞ்சிகைகள், வார வெளியீடுகள் முதலியனவற்றை தடை செய்ய வேண்டும் என்று மிகவும் கீழ்த்தரமான முறையில் எழுதி இருக்கிறது. இதற்கு அது கூறும் காரணங்கள் (i) அவை கீழ் தரமானபால் உணர்ச்சியை தூண்டும் — ஆபாசம் நிறைந்தவை (ii) நச்சு அரசியல் கருத்துக்களை பரப்புபவை (iii) இவை மூலம் வெளியே போகும் அந்நிய செலவாணியை மிச்சம் பிடிக்க வேண்டும் இவை தான் அது கூறும் முக்கிய காரணங்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஏனெனில் குணசேன நிறுவனம் வெளியிடும் பத்திரிகைகள் எல்லாமே பெரும்பாலும் ஆபாச செய்திகளையும் படங்களையும் தாங்கித்தான் வெளிவருகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படி இந்த நிறுவனமே தவறு செய்து கொண்டு ஆபாசக் களஞ்சியங்களை வெளியிட்டுக்கொண்டு இருக்கையில்—இதே நிறுவனத்தில் இருந்து வெளிவரும் 'சன்' இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டு — தெரியாதமாதிரி—தமிழக பத்திரிகைகளை ஆபாசக் களஞ்சியக்கள், குப்பைகள் என்று கண்டிப்பதற்கு என்ன துணிவு வேண்டும் இதற்கு? யாரை ஏமாற்றப் பார்க்கிறது இது? தனக்கொரு நியாயம் மற்றவர்களுக்கு ஒரு நியாயமா? இதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்களென்ன முட்டாள்களா? அல்லது உணர்ச்சியற்ற மரக்கட்டைகளா?

சன் பத்திரிகை எவ்வளவுதான் கரடியாக கத்தினாலும் இதன் சகோதர தமிழ் பத்திரிகைகளான தினபதி, சிந்தாமணி, தந்தி, சுந்தரி (சுந்தரியின் அக்கா ராதா எப்

**மக்கள் குரல்**

பவோ இறந்து விட்டாள்) எல்லாம் என்ன செய்கின்றன? கூடியவரை இவை யாவும் தமிழக அரசியல் செய்திகளையும், சினிமா செய்திகளையும் தாங்கித் தான் வெளிவருகின்றன. தமிழ் மக்களும் இந்த செய்திகளை அறிவதற்கு இவற்றை வாங்கி படிக்கிறார்கள். இல்லையேல் இந்த பத்திரிகைகளை— இவை பெரும்பாலான தமிழ் மக்களுக்கு எதிரான-மாறான அரசியல் கொள்கைகளை கடைபிடிக்கும் காரணத்தால் — இவற்றை வாங்கி படிக்கவும் மாட்டார்கள். எட்டியும் பார்க்கமாட்டார்கள். இது சன்னுக்கும் தெரியும் குணசேன நிறுவனத்துக்கும் தெரியும்.

இவற்றின் உள் நோக்கம் என்னவெனில் — அடியோடு தமிழக பத்திரிகைக.. தடை செய்துவிட்டால் — தமிழக அரசியல் — சினிமா செய்திகளை இன்னும் கூடுதலாக கவர்ச்சிகரமாக வெளியிடலாம் — அப்பொழுது தமிழ் மக்கள் வேறு வழியின்றி தங்கள் பத்திரிகைகளை வாங்கி படிப்பார்கள் — இதனால் விற்பனை இன்னும் பன்மடங்கு கூடும் — வியாபாரமாகும் என்ற சதி நோக்கம் தான் இதன் உள்நோக்கமே தவிர உண்மையில் எங்கள் மீது பற்றுக்கொண்டோ — அந்நிய செலவாணியை மிச்சப் பிடிக்கவேண்டுமென்றோ அது இப்படி எழுதவில்லை,


(8-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 134ஏ; இலக்கத்தில் 1973ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7வது ஜனத்திரள் வாரம்!

# சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்நகர்)



தமிழ் நாட்டில் 100 நாட்களுக்குமேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர், ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி —நடித்த—

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# வாழையடி வாழை

---

# 7வது வாரம் கெயிட்டி

ஜெமினி
நிர்மலா
முத்துராமன்
மனோரமா நடித்த

## சுடரும் சூறாவளியும்

எம். கே. ராதா — ரஞ்சன்

என். எஸ். கிருஷ்ணன் — ரி. ஏ. மதுரம்
ரி. ஆர். ராஜகுமாரி நடித்த—

## சந்திரலேகா [புத்தம் புதிய கொப்பி]

செல்லமகால் திரையில்

---

100 நாட்கள் சென்னையில் ஓடியது

விரைவில் வருகிறது

செல்லமகாலில்




திரைக்கதை வசனம், டைரக்ஷன்: கோபு


# காசேதான் கடவுளடா!

---

4வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

5வது வாரம் லிடோ (யாழ்நகர்)

ஜெய்சங்கர்,
லக்ஷ்மி, (இருவேடங்களில்)
முத்துராமன்,
சுந்தரராஜன்,
மனோரமா, பாலையா,
எம். ஆர். ஆர். வாசு,
பேபிராணி
மற்றும் பலர் நடித்த



# ராணியார்குழந்தை

---

# 165வது தினம்



கெப்பிட்டல் (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், — வாணிஸ்ரீ
நடித்த

# வசந்தமாளிகை

( ஈஸ்ட்மென் கலர் )

வெள்ளி விழாவை நோக்கி வெற்றி நடை போடுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org